www.padippakam.com

# கட்டுநாயக்க ஏற்றுமதி பதனிட்டு வலயத்தின் உழைப்புப்படை முகங்கொடுக்கும் சமூக பொருளாதார பிரச்சினைகள் பற்றிய அறிக்கை

பேராசிரியர் ரி. ஹெட்டி ஆராய்ச்சி
தமிழ் மொழி பெயர்ப்பு செ.லோகநாதன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கட்டுநாயக்க ஏற்றுமதி பதனிட்டு வலயத்தின் உழைப்புப்படை முகங்கொடுக்கும் சமூக பொருளாதார பிரச்சினைகள் பற்றிய அறிக்கை

பேராசிரியர் ரி. ஹெட்டி ஆராய்ச்சி
தமிழ் மொழி பெயர்ப்பு செ.லோகநாதன்

வெளியீடு
இலங்கையில் ஜனநாயகத்திற்கான அமைப்பு

படிப்பகம்

www.padippakam.com

கட்டுநாயக்க ஏற்றுமதி பதனிட்டு வலயத்தின்
உழைப்புப் படை முகம் கொடுக்கும் சமூக,
பொருளாதார பிரச்சினைகள் பற்றிய அறிக்கை

பேராசிரியர் ரி.ஹெட்டி ஆராச்சி

மொழிபெயர்ப்பாளர் செ. லோகநாதன்

மே 1993

வெளியீடு
CAMPAIGN FOR DEMOCRACY IN SRI LANKA [C.D.S.L]
320 MC COWAN RD.,#1804
SCARBOROUGH, ONT.
M1J 2N2
CANADA



படிப்பகம்

# பதிப்புரை

இலங்கை வாழ் சகல மக்கட் பிரிவினரும் பூரணத்துவமான ஜனநாயகத்தை வென்றெடுக்கவும் அனுபவிக்கவும் வேண்டும் என்னும் உயர் நோக்கத்திற்காக தனது பங்கினைச் செலுத்த செயற்படும் அமைப்பே இலங்கையில் ஜனநாயகத்திற்தான அமைப்பு ஆகும்.

இந்நோக்கிற்காக செயற்பட இலங்கை மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளையும் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார பிரச்சினைகள் அனைத்தையும் விளங்கிக் கொள்வதும் இது தொடர்பாக எமது மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் அவசியமென இலங்கையில் ஜனநாயகத்திற்கான அமைப்பு கருதுகிறது.

www.padippakam.com

இது மட்டுமன்றி, எமது நாட்டுக்குச் சமாந்தரமான நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்கும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளின் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதும் ' இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவ்வவ் நாட்டு மக்களும், மக்கள் இயக்கங்களும் செயல்படும முறையை அறிந்து கொள்வதும், எமது பிரச்சினைகள் தொடர்பாக நாம் செயல்படுவதற்கு அவசியம் என 'இலங்கையில் ஜனநாயகத்திற்கான அமைப்பு' உறுதியாக நம்புகிறது.

ஆதலால் எமது இப்பணியின் ஆரம்ப முயற்சியாக இச்சிறு நூால வெளியிடப்படுகிறது. இலங்கை தொடர்பாகவும் ஏனைய மூன்றாம் உலக நாடுகள் தொடர்பாகவும் இவ்வாறான சிறு நூல்களை தொடர்ச்சியாக வெளியிடவுள்ளோம் என்பதனையும் அறியத தருகின்றோம்.

கொழும்பு பல்கலைக் கழக சமுகவியல் திணைக்களத் தலைவர் பேராசிரியர் ரி.ஹெட்டியராச்சி அவர்களால் 'பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு' விற்காக *1990* ஜூன் மாதம் நடாத்தப் பெற்ற வெளிக்கள ஆய்வு அறிக்கையே இக்கட்டுரையாகும். இக்கட்டுரை *1991* டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட UNIVERSITY OF COLOMBO REVIEW SPECIAL ISSUEஇல் இருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிக்கையை தமிழில் நூாலாக வெளியிட எமக்கு அனுமதி வழங்கிய பேராசிரயர் ரி. ஹெட்டியராச்சி அவர்களுக்கு எமது நன்றி.

பதிப்பாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com

# கட்டுநாயக்க ஏற்றுமதி பதனீட்டு வலயத்தின் உழைப்புப்படை முகங்கொடுக்கும் சமூக பொருளாதார பிரச்சனைகள் பற்றிய அறிக்கை.

இறக்குமதிப் பொருட்களுக்கு மாற்றீடான பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் அபிவிருத்தி குறைவான பிரதேசங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் முறையானது லத்தீன் அமெரிக்க நாடுகளின் சில பிரதேசங்களில் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் இவ் அபிவிருத்தி முறையானது இப்பிரதேசங்களின் வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமை, பின்தங்கிய நிலை ஆகிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான ஆற்றல் அற்றது என நிரூபிக்கப்பட்டதால் ஏற்றுமதி ஊக்குவிப்பை இலக்காகக் கொண்ட அபிவிருத்தி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஏற்றுமதியை ஊக்குவிக்கும் அபிவிருத்தி மூல உபாயமானது சிங்கப்பூர், ஹொங்கோங், கொரியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, தாய்லாந்து உட்பட ஆசியாவில் உள்ள அனேக மூன்றும் உலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே, கூடிய தொழில் வாய்ப்புகளையும், தொழிற்துறை விருத்தியையும் அடைவதற்காக இதே மாதிரியான அபிவிருத்தி முறை, அதாவது இறக்குமதிப் பொருட்களுக்கு பதிலீடான பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் முறையை இங்கையிலும் 60கள் பூராவும் 70களிலும் காணக்கூடியதாக விருந்தது. இக்கொள்கையின் இயல்பான விளைவாக இறக்குமதி கண்டிப்பாக கட்டுப்படுத்தப்பட்டதுடன் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கென்றே உள்நாட்டுச சந்தையும் பேணப்பட்டது. எவ்வாறுயினும் இக் கொள்கையில் இருந்து முற்றுக வேறுபட்ட திருப்பம் ஒன்று 1978ல் ஏற்பட்டது. புதிய அரசா}கம் வெளிநாட்டு வணிகத்திற்கு சுதந்திரம் அளித்ததுடன் இறக்குமதிக்கு மாற்றீடான பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது. பெரும் போட்டி நிலவுகின்ற வெளிநாட்டுச் சந்தையில் பிரவேசிப்பதற்கு அவசியமான மூலதனமும் தொழில நுட்பமும் இலங்கையில் பற்றுக்குறையாக காணப்பட்டதால், உள்நாட்டு மூலதனத்துடன இணைந்து இலங்கையில் முதலீடு செய்வதற்காக பல்தேசியக் கம்பனிகள் அழைக்கப்பட்டன. இவ்வாறே ஏற்றுமதி ஊக்குவிப்பும் சுதந்திர வர்த்தக வலயமும் இலங்கையில் ஏற்பட்டது. இன்று இவ் மூல உபாயமானது இலங்கையின் தேசிய பொருளாதாரத்தில் அதிகரிக்கும முக்கியத்துவமான பாத்திரத்தை வகிக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

ஏற்றுமதி ஊக்குவிப்பு அபிவிருத்தி முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டிய இன்னுமொரு பக்கம் குறித்து பார்வை செலுத்தப்படவில்லே. அதாவது சுதந்திர வர்த்தக வலயம் ஸ்தாபிக்கப்பட்டவுடன் உருவாகிய சமூக பொருளாதார பிரச்சனேகள் பற்றிய பக்கமாகும். பாரிய கொழும்பு பொருளாதார ஆணேக்குழுவால் 1989ம் ஆண்டு நடாத்தப்பட்ட ஆராய்வின்படி இல}கையின் சுதந்திர வர்த்தக வலங்களில் சுமார் 60,000 தொழிலாளர்கள் வேலேக்கமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களில் 87 சதவீதமானோர் பெண்களாவர்.* இப்பெண்கள் பொதுவாக 18-25 வயதுக்குட்பட்ட திருமணமாகாத இளம் பெண்களாவர். அத்துடன் இவர்கள் கிராமப்புற ஏழைக் குடும்பங்களேச் சார்ந்தவர்கள். இவர்களது கலாச்சாரப் பின்னணியானது அனேக விடயங்களில் நகர்ப்புற தொழிலாளர்களே விட வேறுபட்டது.

அதி செறிவான முறையில் இளம் பெண் தொழிலாளர்களே தொழிற்சாலேக் கூலிகளாக வேலேக்கமர்த்துவது இலங்கைச் சமூகத்தில் அண்மையில் ஏற்பட்ட விருத்தியாகும். இவ்விடயம் தொடர்பான சில அடிப்படைக் கேள்விகள் சமூகவியலாளர்களிடம் ஏற்படுகிறது. இலங்கை அரசாங்கத்தால் கடைப் பிடிக்கப்படுகின்ற இப்புதிய அபிவிருத்தி மூல உபாயமானது அபிவிருத்தி பதனீட்டு வலயங்களில் தொழில் புரிகின்ற பெண் தொழிலாளர்களின் சமூக-பொருளாதார நிலமைகளில் எவ்வாறுன தாக்கங்களே ஏற்படுத்துகின்றது ? இக் கேள்விக்கு பல கோணங்கள் உண்டு. முதலாவதாக இவ் உழைக்கும் பெண்களது பொருளாதார நிலேமைகளில் குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டுள்ளதா? இரண்டாவதாக முற்றிலும் எவ்விதத்திலும் பழக்கப்படாத சமூக - வாழ்க்கை சுற்றுச் சார்பு நிலேக்கு நேரடியாக முகங் கொடுப்பது இவ் இளம் பெண்களின் வாழ்க்கையில் எவ்விதமான பாரத்தை சுமத்துகிறது? மூன்ருவதாக இவ் இளம் பெண்கள் ஏற்றுமதி ஊக்குவிப்பு உழைப்பில் ஈடுபடுவது இலங்கைச் சமூகத்தில் மரபு ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விழுமியங்களுக்கு எவ்விதமான தாக்கங்களே ஏற்படுத்துகிறது? இறுதியாக இவ் இளம் பெண்கள் ஆகக் கூடியது 10 - 15 வருடங்களில் சுதந்திர வர்த்தக வலய வேலேகளில் இருந்து விலகியதன் பின்னர், அவர்களுக்கு எவ்வாறுன, தொழில், பொருளாதார, சமூக வாய்ப்புகள் உண்டு?

உலகம் பூராவும் உள்ள ஏற்றுமதிப் பதனீட்டுத் தொழில் துறையின் உழைப்புப் படையில் மிகப் பெரும்பாலானோர் பெண்களேயாவர். ஏற்றுமதிப் பதனீட்டு வலயங்கள் உருவாக்கப்பட்டபோது அதன் கட்டாய விளேவாக சமூக இடைவெளி நிலைமை ஒன்று தோன்றியது. அதாவது வலயத்தை நோக்கி வீசப்பட்டுள்ள சனத்தொகையின் பால் விகிதாசாரமானது எவ்விதத்திலும் சமம் அற்றதாகவே ஏற்படுத்தப்பட்டது. இது தொடர்பாகவும் இரு கேள்விகள் எழுகின்றன. எவ்விதத்திலும் சமமற்ற பால் விகிதாசாரமானது இ}கு வேலே செய்யும் இளம் பெண்களின சமூக நிலேமைகளில் எவ்விதமான பாதிப்பை ஏற்படுத்துகிறது? இரண்டாவதாக, அவ்வாறுன நிலைமை முழுச் சமுதாயத்திற்கும் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஏற்றுமதிப் பதனீடானது அபிவிருத்தி குன்றிய நாடுகளின் அபிவிருத்தி மூல உபாயத்திற்கு இரு வகையில் உதவலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்று, பற்றுக் குறைவான வெளிநாட்டுச் செலவாணியைப் பெற்றுத் தருகிறது. இரண்டாவதாக, அதிக தொழில வாய்ப்புக்களே ஏற்படுத்துவதன் மூலம் முன்றும் உலக நாடுகளில் உள்ள வேலே இல்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும் பிரதான பாதையாகக் கருதப்படுகிறது. முதலாவது கேள்வியை பொருளியல் விற்பன்னர்கள் கையாள்வதற்கு விடுத்து இரண்டாவது கேள்வியை சமூகவியலாளர்கள் எடுத்துக் கொள்ளலாம்.



படிப்பகம்

இலங்கையின் ஏற்றுமதிப் பதனீட்டு வலயங்களில், தொழிற்சாலைகள் சார்ந்த துறையில பல்லாயிரக் கணக்கானோருக்கு மிகக் குறுகிய காலத்தில் வேலைகள் வழங்கப்பட்டன என்பது குறித்து எவ்வித சந்தேகமும் இல்லை. எவ்வாறுயினும் மிக முக்கியமான கேள்வி என்னவெனில் நாட்டின் வேலை இல்லாப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இது எவ்வளவு தூரம் உதவியது என்பதாகும்.

விவாகம் ஆகாத இளம் பெண் தொழிலாளர்கள் தமது பெற்றோரின் அன்றுட செலவுகளுக்காக தமது வருமானத்தின் ஒருபகுதியை தொடர்ச்சியாக வழங்கி வருகிறுர்கள் என்பதை கிடைக்கும் தகவல்களிலிருந்து அறியமுடிகிறது. இவ்வாழ்க்கைப் போக்கானது இலங்கைச் சமுதாயத்தின் மரபு ரீதியான குடும்பக் கட்டமைப்புத் தொடர்பாக எவ்விதமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. கேள்வியை இலகுபடுத்துவதாயின், ஆணாதிக்க சமுதாயத்தில் நிலவும் ஆண் - பெண் உறவு நிலமைகளில் ஏதாவது முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றதா? அல்லது, எதிர்மாருக, இவ் இளம் பெண்கள் சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரிவதால யதார்த்தபூர்வமாக சமுதாயத்தின் மதிப்புக் குறைந்தவர்களாக இவர்கள் கருதப்படுகிறுர்களா? இக் கட்டுரையினூடாக பதில் அழிப்பதற்கு மேலே கேட்கப்பட்ட சில கேள்விகள பொருத்தமானவை என்பதை மனதில் கொள்கிறேன்.

மிக அண்மையில் ஏற்றுமதிப் பதனீட்டுத் தொழிற்துறையில் பிரவேசித்த இலங்கை நிலைமைகளின் கீழ் மேலே குறிப்பிட்ட கேள்விகளை விளங்கிக் கொள்ள வேண்டுமாயின், இயன்றவரை பொதுவாக மூன்றும் உலக நாடுகளின் ஏற்றுமதி ஊக்குவிப்புத் தொழில், பல்தேசியக் கம்பனிகளின் படர்ச்சி ஆகியன பற்றியும் சற்று ஆழமாக செல்ல வேண்டியுள்ளது.

ஐரோப்பாவில் தொழிற்துறை வளர்ச்சி ஏற்பட்டதிலிருந்து - விசேடமாக குறிப்பிட்ட தொழில் அதிக உழைப்பை உறிஞ்சுவதாக இருக்கும்போது - மலிவு உழைப்பைத் தேடிச் செல்லுதல், இலாபத்தைப் பெருக்குவதற்கான ஒரு வழியாக செயற்படுத்தப்பட்டது. வர்த்தகத்தில் போட்டி அதிகமானதும், அதிக உழைப்பை உறிஞ்சுவதுமான புடவை, உடுதுணி, உணவு பதனிடல் ஆகிய உற்பத்தித் தொழிலில் ஈடுபடும்போது மலிவு உழைப்பைத் தேடுதல் முக்கியமானதாகக கருதப்பட்டது.* பெண் உழைப்பை ஏற்றுமதிப் பதனீட்டு கைத்தொழில்களுக்கு சேர்த்துக் கொள்ளல் மலிவு உழைப்பைத் தேடுவதன் ஒரு படியாகும். புடவை, உடுதுணி, மிக அண்மையில் மின்னியக்கப்பொருட்கள் ஆகியன தொழிற் துறையில் பெண் உழைப்பைப் பயன்படுத்தல் சம்பிரதாய பூர்வமாக நிலவி வருவதை முதலாளித்துவ தொழிற்துறை அபிவிருத்தியின் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. மூன்றும் உலக நாடுகளில் ஆண் உழைப்பை விட பெண் உழைப்பு எப்போதுமே மலிவாக இருந்த காரணத்தால் தொழில் அதிபர்கள் தமது லாபத்தைப் பெருக்குவதற்காக பெண் உழைப்பையே விரும்பினர். பல்தேசியக் கம்பனிகளில் தமது தொழிற்சாலையை அமைக்கும் விடயத்தை தீர்மானிப்பதில் பெண் உழைப்பே பிரதான பாத்திரத்தை வகிக்கிறது. ஆதலால் கூடுதல் உழைப்பை உறிஞ்சுகின்ற தொழிற்துறைக்கான இடத்தை பல்தேசியக் கம்பனிகள் தேர்ந்தெடுக்கும் போது எந்த நாடுகளில் மலிவு உழைப்பு, ஆகக்கூடுதல் மட்டத்தில், வேலை இல்லாத் திண்டாட்டம், மட்டுப்படுத்தப்பட்ட இயற்கை வளங்கள் உள்ளனவோ அந்நாடுகளே தேர்ந்தெடுக்கப்பட்டன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மூலதனத்தை விரைவாக உறிஞ்சுகின்ற தொழிற் துறைகளை இறக்குமதி செய்வது ஒப்பீட்டளவில் குறைவான வேலைவாய்ப்புகளையே வழங்குகின்றது என விமர்சனம் செய்தவர்களின் எதிர்ப்பும் ஏற்றுமதி ஊக்குவிப்புத் தொழிலுக்கு இருந்தது.

தொடர்ந்தும் அதிகரித்துவரும் சனத்தொகைக்கு கூடுதலான தொழில்களை ஏற்படுத்துவது மூன்றும் உலக நாடுகளின் அபிவிருத்தி முகங்கொடுக்கும் பெரும் பிரச்சனைகளில் ஒன்றுகும். எவ்வாறுயினும் உழைப்பை அதிகமாக உறிஞ்சுகின்ற ஏற்றுமதி ஊக்குவிப்பு தொழிற்துறை சர்வதேச மட்டத்தில் சரியான முறையில் போட்டி போடுவதாயின் கூலியை மிகவும் தாழ்ந்த மட்டத்தில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். வெளிநாட்டு மூலதனத்தை கவரும நோக்குடன் பல்தேசியகக் கம்பனிகளுடன் இணைந்து செயற்பட உள்நாட்டு நிறுவனங்களுக்கும் பல விதமான சலுகைகள் வழங்கப்பட்டன. தொழிலாளர் நலம் தொடர்பாக சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை மீறியும், மற்றும் சட்ட, அறநெறி விதிகளிலிருந்து தப்பித்துக் கொள்ளக் கூடியவாறுமான ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் என்னும் புதிய மூல உபாயம் ஒன்றை இந்நாடுகளின் அரசாங்கங்கள் விருத்தி செய்தன. அவ்வாறுன ஏற்றுமதி பதனீட்டு வலயங்கள் அல்லது சுதந்திர உற்பத்தி வலயங்கள் சில சந்தர்ப்பங்களில் உற்பத்தித் தளங்கள் எனப்படுபவையின் பிரதான பணி உலக சந்தையை நோக்கிய உற்பத்திக்காக உழைப்பைப் பயன்படுத்தும் உற்பத்தி முறையாகும். இத் தொழிற்துறையில் ஈடுபடுத்தப்படும் தொழிலாழர்களையும் உற்பத்தியையும் கட்டுப்படுத்தக் கூடியவாறு சுற்றுப்புறச் சூழல் திரையிட்ட மறைகக்கப்பட்டு வேற்று நாட்டவர் எல்லைக்குட்பட்ட பகுதி போல் இவ்வலயயங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. வாய்ப்புகளை எதிர் நோக்கி வரும் முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக தொழிலாளர் அணி திரளலும் தொழிற் சங்கங்களும் ஆகக் குறைந்த பட்டசத்தில் இருக்கக் கூடியவாறுன சட்டங்கள் இச் சுதந்திர வர்த்தக வலயத்திற்கென அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஒன்றில் தொழிற் சங்கங்கள் அனுமதிக்கப்படுவதில்லை அல்லது வரையறுக்கப்படுகின்றன. குறைந்த சம்பளம் பாதக தொழில் நிலைமைகள் காரணமாக தொழிலாளர்கள் ஏதாவது அர்த்தமுள்ள வகையில் கூட்டாக இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகும். குறைந்த சம்பளம் சேவை நிபந்தனைகளுக் கெதிராக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்யும சந்தர்ப்பங்களில் உடனடியாக அவை அரசாங்கங்களால் அடக்கப்படுகின்றன.

குறைந்த வேதனத்திற்கு பயிற்சியற்ற பெண் உழைப்பைப் பயன்படுத்துவது மூன்றும் உலக நாடுகளின் ஏற்றுமதி ஊக்குவிப்பு தொழிற் துறையில் எப்பொழுதுமே காணக்கூடியதாக உள்ளது. கொரிய நாட்டு பெண் தொழிலாளர்களால் 1970களில் நடாத்தப் பெற்ற ஆர்ப்பாட்டமானது இத் தொழிற்துறைப் போக்கில் உள்ள பெரும் பிரச்சனைகளை சுருக்கமாக எடுத்துக்காட்டிய ஒரு சந்தர்ப்பமாகும். இவ் எதிர்ப்பார்ப்பாட்டமானது கொரிய நாட்டு சுதந்திர ஏற்றுமதி வலயத்தின் தொழிற்சாலைகளில் நிலவிய கூலி, உணவு, பிரயாணப்படி, மிகை ஊதியக் கொடுப்பனவு (பண வீக்கத்தை சரியீடு செய்வதற்காக), ஜப்பானிய ஆண உத்தியோகத்தர்களால் மானபங்கப்படுதல், பாலியல் சேட்டைகள் ஆகியவற்றிற்கு எதிராக தன்னியல்பாக வெடித்துக் கிளம்பிய ஒன்றுகும். நிரந்தரமாக வேலைக்கு அமர்த்துதல தொடர்பான தொழிலாளர் நலன்களில் இருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக மெக்சிக்கோ நாட்டின் பெண் தொழிலாளர்கள் அடுத்தடுத்து தற்காலிக ஒப்பந்தங்களில வேலைக்கமர்த்தப்படுவதும் வேலை நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் வேலைக்கு அமர்த்தப்படுவதும் இடம் பெற்று வருகிறது.

தென் கிழக்கு ஆசியாவில் உழைப்பு படிநிலை அமைப்பொன்று ஏற்கனவே அபிவிருத்தி பெற்றுள்ளது. மிகவும் உறுதிபெற்றுள்ள தொழிற் துறை நிலையங்களான சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய இரு நாடுகளும் இவ் உழைப்புப் படிநிலை அமைப்பின் பிராந்திய தலைமையகங்களாக மாறியுள்ளன. இவ் இரு நாடுகளின் உயர்மட்டப் பயிற்சி உழைப்புத தேவையானது தொழிலாளர்களுக்கு நல்ல சம்பளத்துடன் தொழில்களை வழங்குகிறது. தொழிற்சாலைகளின் உற்பத்தியை சர்வதேச ரீதியாக பரீட்சிக்கும் நடுநிலைப் பாத்திரத்தை மலேசியா வகிக்கிறது.

ஆகக்குறைந்த சம்பளமும் மிகவும் கேடான சேவை நிபந்தனைகளும் கொண்ட நாடுகளாக இந்தோனேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய மூன்று நாடுகளும் உள்ளன. ஏற்றுமதி ஊக்குவிப்பு தொழிற் துறையில் பிரவேசித்த இலங்கை ஒரு தசாப்தத்திறகும் குறைவான வரலாற்றையே கொண்டுள்ளது.

## இலங்கை ஏற்றுமதி பதனீட்டு வலயத்தின் உழைப்பு நிலமைகள்:

ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்தின் தொழிலாளர்களுக்கு போதாக்குறைவான சம்பளம் வழங்குதல் இலங்கையின் ஏற்றுமதி பதனீட்டு வலயம் தொடர்பான அடிப்படைப பிரச்சனைகளில் ஒன்றுகும். ஆகக் குறைந்த மாதச் சம்பளமாக் ரூபா 1000_ நிலவிய போதிலும் பெரும்பாலான தொழிலாளர்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் சம்பளம் இத்தொகைகயை விட ரூபா 150 குறைவாகும். பயிலுநிலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சனை மிகவும் கூர்மையானது. அவர்கள் ரூபா 700 க்குச சற்றுக்கூடுதலான தொகையையே வீட்டுக்கு எடுத்துச் செல்லுகின்றனர். இச் சம்பளத்தில் ரூ 100-125 வரை தங்குமிட வாடகையாகவும் சுமார் ரூ 500 சாப்பாட்டுக்காகவும செலவிடப்படுகிறது. அனேக தொழிலாளர்களுக்கு விசேடமாக பயிலுநிலைக் காலத்தில மிஞ்சும் பணம் அவர்கள் பண்பான முறையில் உடுப்பதற்குக் கூட போதாததாகும். உண்மையிலேயே அனேக தொழிலாளர்கள் தங்கள் பெற்றோர்களின் வீட்டிலிருந்து அரிசியையும் தேங்காயையும் கொண்டு வருகின்றனர். அவர்களது வறுமை குறித்து எந்தவொரு விளக்கவுரையும் அவசியம் இல்லை. ஊட்டச் சத்துக் குறைவால் பீடிக்கப்பட்டுள்ளனர். போடிங் ஹவுஸில் இருக்கும் போது கந்தல் ஆடைகளையே அணிகின்றனர். தொழில் செய்யும் ஒரு பெண்ணின் சராசரி மதிய போசனம் 50 கிறும் எடையுள்ள சோறும் 15 கிறும் எடையுள்ள மரக்கறியும் ஆகும். சில சந்தர்ப்பங்களில் துருவிய தேங்காயிலான சம்பல அல்லது மூன்று நான்கு நெத்தலி அல்லது சிறிய துண்டு கருவாடு மரக்கறியின் இடத்தைப் பெறுகிறது. கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் பெண் தொழிலாளர்களின் உணவு நிலைமை தொடர்பான 1983 தகவல்களின் 37% தமது உணவுகளை குழுக்களாக அல்லது தனியாக சமைக்கின்றனர். 21வீதமானோர் தமது உணவுகளை வெளி வினியோகஸ்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர். இது"வெளியில் சாப்பிடுவது" என்னும் சுபாவத்தைக் கொண்டதல்ல. அதே கிராமத்தின் பிறிதொரு கிராமத்தில் இருந்து தமது உணவைப் பெற்றுக் கொள்கின்றனர். த}குமிடம் வழ}கிய வீட்டார் உணவு வழ}க விரும்பாததாலும் அல்லது சில சந்தர்ப்பங்களில் பெண் தொழிலாளர்கள் தமது உணவை வெளியிலிருந்து பெற விரும்புவதாலும் இடம் பெறுகிறது. ஆனுல் கடந்த சில வருட காலத்துள் உணவின் விலை வானளாவ உயர்ந்துள்ள காரணத்தினுல் வெளியிலிருந்து தமது உணவைப் பெறும் நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஏற்றுமதி ஊக்குவிப்பு வலய சுற்றுடலில் மதிய போசன முடிச்சு ஒன்று சுமார் 15 ரூபா ஆகும் . அனேக தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவ்வாறுன சமைக்கப்பட்ட உணவு அவர்களால் அடையமுடியாத ஒன்றுகும்.

தொழிலாளர்களுக்கு குறைவான சம்பளம் வழங்குவது மட்டுமன்றி, நிருவாகமும தொழிலாளர்களை இருவகையாக ஏமாற்றுகிறது. தொழிலாளர்களின் பயிலுநிலைக் காலத்தை விதிக் கட்டுப்பாடுமற்ற முறையில் நீடிப்பதன் மூலம் பெறும் ஊதியத்தை விட நல்ல ஊதியம பெறுவதிலிருந்து தொழிலாளர்கள் தவிர்க்கப்படுகிறுர்கள். இவ் நடைமுறையானது பல் தேசியக் கம்பனிகளினுல் ஏனைய இடங்களிலும் கடைப் பிடிக்கப் படுகிறது.

உதாரணத்திற்கு மெக்சிக்கோவில் பெண் தொழிலாளர்கள் அடுத்தடுத்து தற்காலிகமாக வேலைக்கமர்த்தப் படுவதும் வேலை நீக்கம் செய்யப் படுவதன் மூலமும் நிரந்தர தொழிலுடன் தொடர்பான உரிமைகள் மறுக்கப்படுதலைக் காணமுடிகிறது.

குறைவான சம்பளம் என்பது ஏற்றுமதி ஊக்குவிப்பு மூல உபாயத்திலிருந்து நீக்க முடியாத ஒரு தன்மை என்பதை அவதானிக்க முடிகிறது. ப்ரோபெல் **(frobel)** இன் கருத்துப்படி மூன்றும் உலக நாடுகளின் ஏற்றுமதி பதனீட்டு தொழிற்துறை தொழிலாளர்களின் சம்பளம், தொழிற்துறையில் அபிவிருந்தியடைந்துள்ள நாடுகளில் அதே தொழிலாளர்களுக்காக வழங்கப படுகின்ற சம்பளத்தின் 10-20 வீதமாகும். இன்னும் தெளிவாகக் கூறுவதாயின நாளொன்றுக்கு அமெரிக்க டொலர் 1-2 வரையே சம்பளமாகப் பெறுகின்றனர்.

குறைவான சம்பளத்துக்கு அடுத்ததாக தொழிலாளர்களின் அதிருப்திக்கான மற்றைய காரணம் விடுமுறை இன்மையாகும். ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் சகல தொழிலாளர்களும் 14 நாட்கள் வருடாந்த விடுமுறைக்கு உரிமையுள்ளவர்கள். அத்துடன் 7 அரசாங்க விடுமுறை நாட்களுக்கும் உரிமையுள்ளனர். இவ் விடுமுறை நலன் கூட அனேக தடை வரம்புகளுக்கு உட்பட்டவையே. சில தொழிற்சாலைகள் அரசா}ஙக விடுமுறை நாட்களான 14 நாட்களில் இருந்து கழிக்கின்றனர். சில தொழிற்சாலைகள் அனுமதிக்கப் பட்ட வைத்திய விடுமுறைகளை இப் 14 நாட்களில் இருந்து கழிக்கின்றனர். இன்னும் சில தொழில்சாலைகளில் தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தப்பட்டு ஞாயிற்றுக் கிழமைகளிலும் வேலை செய்ய விரும்புகிறோம் என முன் கூட்டியே இடாப்புகளில் கையெழுத்து வாங்குகின்றனர். அவ்வாறு ஒப்பமிட மறுப்பவர்கள் தொடர்ந்து வரும் திங்கட் கிழமை வேலை செய்த போதிலும் கூட அந்நாள் சம்பளமற்ற விடுமுறை நாளாக அதாவது வேலைக்கு வராத நாளாகக் கணிக்கப்படுகிறது. பயிலுநிலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை விடுமுறைப பிரச்சனையானது இன்னும் பாரதூரமானதாகும். அனேக சந்தர்ப்பங்களில் இவர்களுக்கான உத்தியோக பூர்வ 14 நாள் விடுமுறையும் கூடமறுக்கப்பட்டுள்ளது. சுழற்சி முறையில் செயற்படுகின்ற தொழிற்சாலைகளில் அடுத்த முறை மாற்றுக்கு யாராவது வேலைக்கு வராவிடில இரண்டாம் முறையும் வேலைக்கு செய்ய வேண்டிய நிலை தொழிலாளர்களுக்கு அடிக்கடி ஏற்படுகிறது.

ஏற்றுமதி ஊக்குவிப்பு வலய உழைப்புப் படையினரின் விடுமுறைப் பிரச்சனையானது அவ உழைப்புப் படையின் கலாச்சாரப் பின்னணியின் ஒளியின் கீழ் ஆராயப்படவேண்டும். கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலய உழைப்புப் படையில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிறு பகுதியினரைத் தவிர அனேகமாக எல்லாரும் கிராமப் புறங்களில் இருந்து வந்தவர்களாவர். அவர்கள் பரம்பரை பரம்பரையாக பருவ காலத்தைக் கொண்ட விவசாய உழைப்பில் மன விருப்புடன் ஈடுபட்டவர்களாவர். நெல் வயல்களிலும் சேனைகளிலும் மிகக கடுமையான உழைப்புக்கு அவர்கள் பழக்கப்பட்டிருந்தாலும் அவ் உழைப்பானது சிறிய அல்லது முற்றுகவே ஓய்வு அற்றதும் முடிவு இன்றி இழுத்து வேலை வாங்குவதாகவும இருக்கவில்லை. அவ்வாறே விவசாய உழைப்பாளிகள் வேலை செய்யும் போது பாடுதல் எவ்வாறுயினும் சக தொழிலாளர்களுடன் கதைப்பதற்குக் கூட அனேக தொழிற்சாலைகளில் அனுமதியில்லை. இவ்வாறுன எதுவித விட்டுக் கொடுப்பும் அற்ற முறையின் கீழேயே உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம் என நிருவாகம் நம்புகிறது.

தொழிற்சாலை நிர்வாகத்தின் இலக்கை அடையும் பிரச்சினைக்கும் விடுமுறைப் பிரச்சினைக்கும இடையே நெருக்கமான தொடர்பு உண்டு, ஹொங்கோங் தாய்லாந்து ஆகிய இரு நாடுகளின் அளவைக் கொண்டே உற்பத்தி இலக்கை நிர்வாகம் தீர்மானிக்கிறது. நிருவாகத்தின்

www.padippakam.com

கருத்துப்படி ஹொங்கோங், தாய்லாந்து தொழிலாளர்கள் அடையும் இலக்கின் 65 வீதத்தையே இலங்கைத் தொழிலாளர்கள் அடைகின்றனர். எவ்வாறுயினும் ஏற்றுமதி ஊக்குவிப்பு தொழில் துறையில் உள்ள தொழிலாளர்களின் உற்பத்தியைப் பொறுத்தவரை அவர்கள் சிங்கப்பூருக்கு அடுத்ததாக இருக்கின்றனர். **(ப.ம.1983)** நாட்டின் அரசியல் பதட்டநிலையிலும் கூட கடந்த சில வருட காலத்துள் கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்துள் துரிதமாக அதிகரித்துள்ள தொழிற்சாலைகளையும் தொழிலாளர் எண்ணிக்கையையும் காணும்போது இலங்கைத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதால் உற்பத்தி அதிகரிக்கிறது என்பதும் இதன் பெறுபேறுக இலாபம் அதிகரிக்கின்றது என்பதும் போதிய சாட்சியங்களாகும். ஏற்றுமதி பதனீட்டு தொழில் துறையில் 1987ல் இருந்த உழைப்புப் படையின் எண்ணிக்கை 30,000 ஆகும். 1990 நடுப்பகுதியில் இது 60,000 ஆக உயர்ந்தது. கட்டுநாயக்கா ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் தங்குமிட உணவுடன் கூடிய இருப்பிடம் பற்றிய பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவின் கள ஆய்வு அறிக்கையின் அறிக்கையின் படி கட்டுநாயக்கா ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் 42,546 பேர் வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ளனர். (1989 பெப்ரவரி மாத அறிக்கை பக்கம் 3)

இவ்வாறுன உற்பத்தி இலக்குகள் பயிலுநிலைத் தொழிலாளர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப படுகிறது. உற்பத்தி இலக்குகளைத் தொழிலாளர்கள் அண்மிக்கக் கூடியவாறுன கட்டிறுக்கமான முறையொன்று வலிந்து செயற்படுத்தப்படுகிறது. எவ்வாறுயினும் எட்டு அல்லது அதற்குக் கூடிய மணித்தியாலம் மாறுபாடற்ற தொடர்ச்சியான வேலை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தொழிலாளர் வலிமையைச் சோர்வடையச் செய்கிறது. இதன் பெறுபேறுக உற்பத்தி குறைகிறது, உள அலைவு நிலை கட்டி எழுப்பப் படுகிறது. இது நிருவாகத்துடனுன மோதல்களுக்கும் தவிர்த்திருக்கக் கூடிய விபத்துகள் ஏற்படவும் வழி சமைக்கிறது.

பெண் மேற்பார்வையாளர்களின் தொல்லைகள் உற்பத்தி ஒழுங்கு முறையின் கீழ் உள்ள சினமூட்டும் சம்பவங்கள் பலவற்றில் ஒன்றென பல தொழிலாளர்கள் அடுத்தடுத்துக் கூறினர். உழைப்புப் படையின் கடின உழைப்புக்குரிய வெகுமானம் மேற்பார்வையாளர்களுக்கும உயர்மட்ட நிருவாகிகளுக்கும் கிடைக்கக் கூடியவாறே அனேக தொழிற்சாலைகளின் உற்பத்தியின் சமூகத் தோற்றம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அதே வேளை தொழிலாளருக்கு தண்டனை வழங்கலும் நடைமுறையில் உள்ளது. உத்தியோக பூர்வ வேலை நேரம் முடிந்த பின்பும் வேலை நேரத்தை நீடித்து வேலை வாங்குவது, மதிய போசன தேனீர் இடைவேளைகளின் போதும் தொழிலாளர்களின் வேலையைத் தொடரப்பண்ணல், தொழிலாளர்களுக்கு உரித்தான விடுமுறையை அங்கீகரிக்க மறுத்தல், உண்மையில் தொழிற்சாலையில் கழித்த நாட்களைக் கூட சம்பளமற்ற விடுமுறையாகக் கணித்தல், தொழிலாளர்களை உடுதுணியால் அடித்தல், கையால் குத்துதல் உட்பட சரீர ரீதியான தண்டனைகள், பகிரங்க முறையில் மானபங்கப்படுத்தல் ஆகியனவும் இடம் பெறுகின்றன.

சுகயீனம் எனக் கருதப்படுகின்ற மாதவிடாய் காலங்களிலும் ஏனைய நாட்களைப் போன்று இலக்கு மட்டத்தைப் பேணும்படி தொழிலாளர்கள் மேற்பார்வையாளர்களால் வற்புறுத்தப் படுவதாக குறிப்பான ஒரு முறைப்பாட்டை பல தடவைகள் கேட்க முடிந்தது. தொழிலாளர்கள் இக் கால கட்டத்தில் கூட இலக்கை அடையாத காரணங்களுக்காக தண்டிக்கப்படுகிறுர்கள். பெண்கள் மாதவிடாய் காலங்களில் உள உடல் சோர்வுறுகின்றனர் என்பது உயிரியல் ரீதியான காரணம் என்பது கவனிக்கப்படவேண்டியதாகும். மாதவிடாய் காலங்களில் பெண்கள் துப்பரவற்றும் அழுக்காகவும் இருக்கிறுர்கள், அவர்கள அக்காலங்களில் சமூக நிகழ்ச்சிகளிலிருந்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்னும்



படிப்பகம்

கலாச்சாரத்தைக் கொண்ட ஒரு நாட்டில் இச் சோர்வு இன்னும் அதிகமாக உள்ளது. பெண் மேற்பார்வையாளர்கள் சீட்டுப் பிடிப்பதாகவும் கூறப்படுகிறது. சீட்டுப் பிடிக்கும் மேற்பார் வையாளர்களால் சீட்டுக்குச் சேராத தொழிலாளர்கள் வேலை நேரங்களில் பெரும அழுத்தங்களுக்கு முகங் கொடுக்க நேரிடுகிறது.

உயர் மட்ட அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே தொடர்பு இன்மையாலும தொழிலாளர்கள் மத்தியிலே மன எரிவும் அதிருப்தியும் ஏற்படுவதற்கான காரண}களில ஒன்றுகும். உற்பத்தி இலக்கை அடைவதற்காக நிருவாகம் மேற்பார்வையாளர்களிலேயே தங்கியுள்ளது. இவ் மேற்பார்வையாளர்கள் தகவல்கள் நிருவாகத்தின் மேல் மட்டத்தை சென்றடைவதற்கான பூரண தடையை ஏற்படுத்துகிறுர்கள். ஆள்பலத்தை (MAN POWER) கையாள்வது தொடர்பான எந்தவித பயிற்சியும் இம் மேற்பார்வையாளர்களுக்கு கிடையாது. இவ் மேற்பார்வையாளர்கள் தொழிலாளர் மத்தியிலிருந்து தகமைப்புள்ளிகளின் அடிப்படையில் பதவி உயர்வு பெற்றவர்களாவர். தினசரி வரவு, சட்டபூர்வமான விடுமுறை உரிமையை அனுபவிக்காவை, வேண்டிய இலக்கைப் பேணுதல், நிருவாகத்திற்கு வேண்டிய எந்தவொரு கூடுதலான வேலையையும் செய்தல் ஆகிய துறைகளே பதவி உயர்வு பெறுவதற்கான தகமைப்புள்ளிகளாகும். இவ்வாறு பதவி உயர்வு பெற்ற மேற்பார்வையாளர்களை தொழிலாளர்கள் புதுப்பெருமையாளர்களாகக் கருதுவதால் இவர்களால் தொழிலாளர்கள் மீது அதிகாரம் செலுத்துவது கடினமாகும். புதிதாக நியமனம் பெற்ற மேற்பார்வையாளர்களும தமது சகாக்களின் இவ்வாறான மனுேபாவத்தை கண்டு சீற்றம் கொள்கின்றனர். இதன் இறுதி விளைவு இவ் இரு சாராருக்குமிடையேயான தொடர்ச்சியான மோதலாகும். இம் மோதல் நிர்வாகத்தினருக்கும் உழைப்புப் படையினருக்கும் இடையேயான மோதலாக காட்சியளிக்கிறது.

புதிதாக பதவி உயர்வு பெற்ற மேற்பார்வையாளர்களுக்கும் உற்பத்தி இலக்கினை அடைதல் அல்லது தூண்டுதல் முலமாக நிருவாகத்தை சந்தோசப்படுத்துவதில் மிதமிஞ்சிய ஆர்வம் காட்டுகின்றனர். இச் சந்தர்பத்தில் இவர்களின் முயற்சிக்கு தொழிலாளர்கள் பக்கத்தில இருந்து ஒத்துழைப்புக் கிடைக்காதபோது எப்பொழுதும் இரு பகுதியினருக்கும் இடையே பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் இடம் பெறுகிறது.

வெளிநாட்டு மூலதனத்தைக் கவர்வதற்காக ஏற்றுமதி பதனீட்டு வலயத்துள் தொழிற்சங்க இயக்கத்துக்கு சட்டரீதியாக தடை விதிக்கப்பட்டது. தொழிற்சங்கங்களில் உள்ள "கூட்டுச்சபைகளே" நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே தொடர்புகளே ஏற்படுத்துவதற்கான இயக்கு கருவியாகும். இக் கூட்டுச்சபைகள் தொழிலாளர் சங்கங்களின் பணிகளே உதாரணமாக தொழிலாளர் குறைபாடுகளே தீர்ப்பதற்காக முன் கொண்டு வருதல போன்ற வேலைகளேச் செய்ய வேண்டிய ஒன்றுகும். ஆதலால் இக்கூட்டுச்சபைகள் எல்லாத தொழிற்சாலைகளிலும் உள்ள உழைப்புப் படையின் பிரதிநிதிகளே உள்ளடக்கியதாகும். எவ்வாறயினும் தொழிற்சாலையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர்கள் நிருவாகத்தினுலேயே தேர்ந்தெடுக்கப் படுவதால் இக் கூட்டுச்சபைகள் தொழிலாளர் குறைபாடுகளேத் தீர்ப்பதில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாத அமைப்பாக உள்ளது. இக்கூட்டுச் சபைகளின் பிரதிநிதிகள் தொழிலாளர்களின் நலனேவிட நிர்வாகத்தின் நலனேயே பிரதிநிதித்துவம் செய்வார்கள் என்பது முற்றிலும் இயற்கையானதே. ஆதலால இக்கூட்டுச்சபையானது தொழிலாளர்களுக்கும் நிருவாகத்திற்கும் இடையேயான அல்லது தொழிலாளர் - நிர்வாகம் - பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்புக் கால்வாயாக கருதப்பட முடியாது.

விபத்துக்களும், விபத்துக்குள்ளானோர் தொடர்பான நிருவாகத்தின் பிரதி நடவடிக்கைகளும் தொழிலாளர் அதிருப்தி அடைவதற்கான மூலகாரணங்களில் ஒன்றுகும். தொழிற்சாலைகளில் விபத்துக்கள் திரும்பத் திரும்ப நிகழ்வதற்கான காரணங்கள் பலவற்றை தொழிலாளர்கள கூறினர்கள் அவை: வெளிநாடுகளில் பலவருடங்கள் பாவிக்கப்பட்டு கைவிடப்பட்ட இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது, மென்மேலும் கூடுதலான இலக்குகளை அடைவதற்காக தொடர்ச்சியாக மேற்பார்வையாளர்கள் அழுத்தங்களை பிரயோகித்தல், தொழிலாளர்களால அவ்விலக்குகளை அடையமுடியாமையும், அவ்வாறு அடையமுடியாதபோது தண்டிக்கப்படு வதாலும் ஏற்படுத்தப்படுகின்ற தொடர்ச்சியான பதட்டம் என்பனவாகும். மருத்துவ உதவி உள்ள தொழிற்சாலைகளில்கூட விபத்துக்குள்ளானவர்களின் காயங்களுக்கு கட்டொன்று போடப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்படுகிறுர்கள். அவ்வசதிகூட இல்லாத தொழிற்சாலைகளில் காயப்பட்டோர் எவ்வித கவனிப்பும் இன்றி வீட்டுக்கு அனுப்பப்படுகிறுர்கள். விபத்து பாரதூரமானதாக இருந்தால் போர்டிங் ஹவுஸ்வரை கொண்டுசென்று விடப்படுகிறுர்கள். சில சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளானவர்கள் நாள்முடியும்வரை வேலைசெய்யுமாறு கட்டாயப்படுத்தப் படுகிறுர்கள். விபத்துக்குள்ளானவர்களுக்கு வைத்திய விடுமுறை வழங்கப்படாதது பலதடவைகள் இடம்பெற்றுள்ளதோடு விபத்து ஏற்பட்டுள்ளதன் பின்னர் வீட்டில் தங்கியிருந்த காரணத்திற்காக விபத்துக்குள்ளானவர்கள் வேலையை இழந்த சந்தர்ப்பங்களையும் அறியமுடிகிறது. விபத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டதாக எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அறியமுடியவில்லை.

## தொழிலாளர்களின் தங்குமிட வசதிகள்:

தங்கள் வீடுகளில் இருந்து வலயத்திற்குத் தினமும் பயணம் செய்யும் மிகச்சிறு பகுதியினரைத் தவிர கட்டுநாயக்க ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்தின் மற்றும் அனைத்துத் தொழிலாளர்களும், வலயத்தை அண்மித்த விடுதிகளிலேயே தங்கியுள்ளனர். போக்குவரத்து முறையின் நிச்சயமற்ற தன்மையால் வலயத்திற்கு அண்மையில் உள்ள விடுதிகளில் தங்கவே அனேக தொழிலாளர்கள் விரும்புகின்றனர். கட்டுநாயக்க ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்தைச சுற்றி ஒரு கிலோமீற்றர் அரைவட்டத்துள் இணைந்துள்ள பிரதேசம் விடுதிகளால நிரம்பியுள்ளது. இத்தொழிலாளர்கள் தீவின் சகல மூலைகளிலும் இருந்து வந்தவர்களாயினும 50 . மேற்பட்டோர் கம்பகா, குருநாகலை ஆகிய இரு மாவட்டங்களையும் சார்ந்தோர் ஆவார். பூர்வாங்க சுற்றுய்வு கேள்விக் கொத்தொன்றிற்கு பதிலளித்த 27,386 பேரில் 20,886 தொழிலாளர்கள் ஏற்றுமதி பதனீட்டு வலயத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் வாழ்வதாக காணப்பட்டது. (Kepz விடுதி தங்ககுமிட வீடுகள் தொடர்பான அறிக்கை 1989-பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு) இவ்விடுதிகளின் கட்டிட நிலைமைகள் தொடர்பாக மேற்படி அறிக்கை கருத்துத் தெரிவிக்கையில் உள்ளூராட்சி மன்றங்களில் இருந்தோ எதுவித அனுமதியும் பெறுமலேயே இக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. கட்டிடங்கள் கட்டப்படும் போது மனித வாழ்விற்கு அவசியமான போதி காற்றேட்டம வெளிச்சம் மலசலகூட வசதிகள் போன்ற ஆகக்குறைந்த சுகாதாரவசதிகள் கூட கருத்தில கொள்ளப்படவில்லை இவ்வறிக்கை மேலும் கூறுவதாவது: காற்றேட்டம், காற்றுச் சுழற்சிக்காக ஆகக்குறைந்தது 360 கனஅடி ஒருமனிதனுக்கு அவசியமாகும். சுற்றுய்வ செய்யப்பட்ட 1000 வீடுகளில் 565 வீடுகளில் இவ்விலக்கத்திற்கும் குறைவாகவே காணப்படுகிறது.(அதே அறிக்கை பக்கம்6)

www.padippakam.com
போடிங்ஹவுஸ் ஒன்றில் 5-200 போவரை வாழ்கின்றனர். போடிங்ஹவுஸில் வாழ்பவர்கள தொகை தொடர்பாக போடிங்ஹவுஸ்களை வகைப்படுத்தல் முற்றிலும் விதிக்குட்பட்டதாகும். ஒருவேளை போடிங்ஹவுஸ் எஜமானர்களின் குடியிருப்பு தொடர்பான வகைப்படுத்தல், ஏற்றுமதி பதனீட்டு வலயம் ஸ்தாபிக்கப்பட்டதன் பெறுபேருக திடீரென வெளித்தோன்றிய போடிங்ஹவுஸ்களால் நிர்மாணிக்கப்பட்ட சமூகப் பிரச்சனைகளின் பல்வகைகளையும் விளங்கிக்கொள்ள ஏதுவாயிருக்கும். ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்தின் தொழிலாளர் தங்குமிடம் என்ற ஒரேகாரணத்திற்காகக் கட்டப்பட்டு பல தொழிலாளர்கள் வாழ்கின்ற இப் போடிங்ஹவுஸ்கள் இவற்றுள் ஒரு முக்கிய வகையாகும். போடிங்ஹவுஸ் எஜமான் எஜமானி அதே வளவுக்குள் வேறு வீட்டில் வசிப்பார். முன்பு வீட்டுச் சொந்தக்காரர் வசித்த வீடுகளை அனேக சந்தர்ப்பங்களில் போடிங்ஹவுஸ்களாக உருமாற்றப் பட்டதோடு உரிமையாளர் புத்தம் புதிதாக கட்டப்படும் வீட்டில் வசிப்பார்கள். இரண்டாவது வகை, அவ்விடத்தைச சார்ந்த குடியிருப்பாளர்கள் தாமும் வீட்டின் ஒருபகுதியில் வசித்துத்துக் கொண்டு வீட்டின் மறுபகுதியை போடிங்ஹவுஸாக பயன்படுத்தினர். போடிங்ஹவுஸ் இருப்பாளர்கள் தங்குவதற்காக தமது வீடுகளில் சகல விதமான திருத்தல் வேலைகளையும் செய்வர். மூன்றுவது வகை, குடியிருப்பாளர்கள் தமது வீடுகளில் ஒன்று அல்லது இரண்டு அறைகளை மட்டும் வாடகைக்கு விடுவர். அனேக சந்தர்ப்ப}களில் இவ்வாறுன போடிங்ஹவுஸ்களில் பத்துக்கும் குறைவானேரே தங்கியிருப்பர். நான்காவது வகை, சம்பிரதாய பூர்வமான வீட்டுத்தலைவன் இவ் போடிங்ஹவுஸ் அமைந்துள்ள வளவிலோ அல்லது அண்மித்தோ வாழ்வதில்லை. இவற்றின் உரிமையாளர்கள் போடிங்ஹவுஸில் இருந்து 20-30 மைல தூரத்தில் வாழ்வதோடு வாடகைப்பணம் வாங்குவதற்காக மட்டும் போடிங்ஹவுஸ்களுக்கு வருவர். உடமைகளைப் பாதுகாப்பதற்கான "காவலாளி" ஒருவர் வளவிற்குள் இருத்தப்படுவர். இறுதிவகை தொழிற்சாலைகளால் பராமரிக்கப்படும் ஒருசில போடிங்ஹவுஸ்களாகும். இறுதியாகக் கூறப்பட்ட வகையானது வாழ்வோரின் எண்ணிக்கைக்காக அல்ல சூழ்ந்துள்ள பிரச்சனைகளையும் மூலக்கோட்பாட்டையும் பொறுத்தவரை முக்கியமானதாகும்.

முதலாவது வகை போடிங்ஹவுஸ்கள், அதாவது ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்தின் உழைப்புப் படைக்கு வாடகைக்குக் கொடுப்பதற்கு என்ற ஒரே காகரணத்திற்காக கட்டப்பட்ட இவ போடிங்ஹவுஸ்கள் கோழிக் குடில்களைவிட எவ்வகையிலும் சிறந்தவையல்ல. பெரும்தோட்டங்களின் பழைய லர்ன் அறைகளையே தோற்றத்தில் ஒத்திருக்கின்றன. ஒரு வித்தியாசம் என்னவெனில் 10' * 8' அல்லது 10' * 9' அறையைக் கொண்ட வீடுகளில் ஒரு அறையில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் வசிப்பதேயாகும். இவ்விடுதிகள் 3-4 அறைகளை பிரிவுகளாகக் கட்டப்பட்டுள்ளன.சில சந்தர்ப்பங்களில இவ்வறைகளின் வாசற்புறம் சிறு முன் தாழ்வாரம் ஒன்று நீட்டப்பட்டிருக்கும். இவ் போடிங்ஹவுஸ்களில் வசிப்போர் உட்காரக்கூடியவாறு வாங்குகள் போடப்பட்ட ஒரு நிழலை இத்தாழ்வாரம் அளிக்கும். இவ்வறைகளுக்கு ஒரு சிறிய யன்னல் உண்டு. இவ்வாறுயின வாழ்பவர்களது எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இவ் யன்னல்களால் கிடைக்கும் காற்றேட்டமும் சூரிய வெளிச்சமும் சுகாதார வாழ்க்கைக்கு எவ்விதிலும் போதுமானதல்ல. இவ்விளம் பெண் தொழிலாளர்கள் திருடர்கள், அத்துமீறி உள் நுழைபவர்களது பயம காரணமாக இரவு வேளைகளில் யன்னலகளைப் பூட்டுவதால் சுகாதாரச் சீர்கேடு மேலும அதிகரிக்கிறது.

சுமார் 30-40 பேர்களுக்கு ஒரு சமையலறை வெளியில் வழங்கப்படுகிறது - பொதுவாக 10 அடுப்புக்களுடன் கூடிய ஒரு சிறிய கொட்டிலாகும். இச்சமையலறையின் பக்கச்சுவர்கள் வழைக்கப்பட்ட இரும்புத்தகடுகளால் அல்லது பலகைகளாலும் கூரைகள் அஸ்பெஸ்டாஸ்



படிப்பகம்

தகடுகளாலும் ஆனவையாகும். சில வேளை இச்சமயலறைகள் வேயப்பட்ட கூரைகளால் ஆனவையாகும். சில விடுதிகளில் வீட்டின் உள் நடைபாதை அல்லது தாழ்வாரம் சமையல இடமாக பயன்படுத்தப்படுகிறது. (அறிக்கை.... பக் 8 )

அறைகளுக்குள் எவ்வித தளபாங்களும் இல்லை. இப் போடிங்ஹவுஸ்களில் வாழ்பவர்கள், உறங்குதல், உண்ணுதல், உட்காருதல், சொந்த உடமைகள், எஞ்சிய சமைத்த உணவுகள் மட்டுமன்றி விறகுகளைக் கூட வைத்திருத்தல் ஆகிய அனைத்தும் ஒரே இடத்திலேயே ஆகும். அனேக விடுதிகளில் உறங்குவதற்காக பாய் ஒன்று வழங்கப்படுகிறது. ஆனால் தலையணை வழங்கப்படுவது அரிதேயாகும். ஏனைய இடங்களில் இவ்வுடுப்புக்களும் போடிங்ஹவுஸில் வாழ்பவர்களாலேயே வழங்கப்படுகிறது. பகல் நேரங்களில் சுருட்டப்பட்ட பாய்களையும் இவ்விளம் பெண்களின் உடுப்புப் பெட்டிகள் நிலத்தில் இருப்பதையும் ஒருவரால் காணமுடியும். கழுவப்படாத துணிகளிலும் செருப்புக்களில் இருந்தும் வெளிப்படும அருவருப்பான நாற்றம் அடிக்கடி குமட்டலை ஏற்படுத்துகிறது.

மிக அனேகமான விடுதிகள் குழாய்நீர் வினியோகம் அற்ற பிரதேசத்தில் அமைந்திருப்பதால இவ் விடுதிகள் கிணறுகளில் இருந்து நீரைப்பெறுகின்றன. கிணற்றுக்கும் மலசலகூட குழிக்கும் இடையில் போதிய அளவு தூரம் இல்லாமையும் அவ்விடங்களில் வடிகால் வசதி யின்மையும் கிணற்றைச் சுற்றி பாதுகாப்பான சீமெந்துக் கட்டோ இல்லாததாலும் கிணற்றுநீர் அடிக்கடி அழுக்கடைகிறது. ஒரே கிணறே குளிப்பதற்கு குடிநீருக்கும் பயன்படுத்தப படுகிறது.(அறிக்கை...பக்7)

ஒவ்வொரு போடிங்ஹவுஸஸ்களிலும் ஒன்று அல்லது இரண்டு மலசல கூடங்களே உள்ளன. பெரிய போடிங்ஹவுஸ்களில் போதிய அளவு மலசலகூடங்கள் இல்லை என்றே தோன்றுகிறது. பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவால் 25 தொழிலாளர்களுக்கு ஒரு மலசலகூடம் என தரப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுய்வு செய்யப்பட்ட 1000 விடுதிகளில் 30 வீடுகளில் இத்தரத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது.

சில போடிங்ஹவுஸ்கள் வீட்டுச் சொந்தக்காரர்களால் சொந்தப் பாவனைக்காக முன்னர் பாவிக்கப்பட்ட வீடுகளாகும். இவ்வாறன வீடுகளில் ஒவ்வொரு மூலை முடுக்கும் அறைக ளாக மாற்றப்பட்டுள்ளன. அவ்வீடுகளின் பெரிய மண்டபங்கள் பொதுவாக மரப்பலகைகளாலும், சில சந்தர்ப்பங்களிலும் பழைய காட்போட் பெட்டிகள் கழட்டப்பட்டு மரச்சட்டங்கள் மீது அடிக்கப்பட்டு அறைகளாக்கப்பட்டுள்ளன. முன்னைய சமையலறைகள், வெளித்திண்ணைகள், புகுமுக மண்டபங்கள், சிலசந்தர்ப்பங்களில் கராஜ்கள் கூட அறைகளாக மாற்றப்பட்டுள்ளன. 5 - 10 பேர்களைக் கொண்ட குடும்பங்கள் வசித்த நடுத்தர அளவிலான வீடுகள் இன்று பொதுவாக நூற்றுக்கு மேற்பட்ட இளம் பெண் தொழிலாளர்களின் உறை விடமாக மாற்றப்பட்டுள்ளன.

மூன்றுவது வகையான போடிங்ஹவுஸ்கள் ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்திற்கு சற்றுத் தூரத்தில அதாவது 1 - 2 கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளன. பிரத்தியேகமான வீடுகளில் ஒன்று அல்லது இரண்டு அறைகள் தொழிலாளர்களுக்காக வாடகைக்கு விடப்பட்டவையாகும் இவ போடிங்ஹவுஸில் உள்ளவர்களுக்கு நல்ல வசதிகள் வழங்கப்படுகின்றன. உறங்குவதற்காக ஒரு கட்டிலும் சொந்த உடமைகளை வைப்பதற்கு சிறிய அலுமாரியும் வழங்கப்படுகின்றது. வீட்டுச் சொந்தக்காரர்களின் சொந்த உடமைகளான தளபாடங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற வசதிகளைப் பாவிப்பதிலும் இவர்கள் பங்கு கொள்கிறார்கள்

www.padippakam.com
அனைத்தையும்விட இவ்வாறான அனேக வீடுகளில் வீட்டுச் சூழ்நிலையில் வாழ்வது போன்ற உணர்வும், ஏனைய வகை போடிங்ஹவுஸ்களில் கிடைக்கப் பெறாத பாதுகாப்பும் இப்பெண் தொழிலாளர்களுக்கு கிடைக்கிறது.

அடுத்த வகையான போடிங்ஹவுஸ்கள்: எஜமான் இன்னும் சரியாகக் கூறுவதானால் வீட்டுச சொந்தக்காரர்கள் அவ்வளவுக்குள்ளேயே அல்லது அண்மித்த இடத்திலோ வாழாத போடிங்ஹவுஸ்களாகும். அவ்வாறான விடுதிகள் பூரணமாக வெளியாருக்குச் சொந்தமானவை. அப்பிரதேசத்தில் போடிங்ஹவுஸ் நடாத்தும் நோக்குடனேயே சொத்தும் வாங்கப்பட்டதாகும். உரிமையாளர் வீட்டு வாடகையைப் பெறுவதற்காக மட்டும் மாதத்திற்கு மாதம் ஒன்று அல்லது இரண்டு தடவை விடுதிக்கு வருவார். பிரச்சனையான நிலைமைகளில உரிமையாளராக உரிமையாளர்களாக செயற்படுமாறு அயலவர்களை உரிமையாளர் நியமித்துள்ளதால் இவ்வாறான போடிங்ஹவுஸ்களை கண்டுபிடிப்பது கஸ்டமாகும்.

இறுதியாக தொழிற்சாலைகளால் ஏற்படுத்தப்பட்ட சில போடிங்ஹவுஸ்களும் உள்ளன. ஆகக்குறைந்த பட்சம் ஒரு தொழிற்சாலையாவது சில போடிங்ஹவுஸ்களை நடாத்துகிறது. இதுவரையும் கூறப்பட்ட போடிங்ஹவுஸ்களை விட இவை கூடுதல் வசதிகளைக கொண்டவையாகும். அறைகளில் மெத்தையுடன் கூடிய பொருத்தப்பட்ட கட்டில்கள் வழங்கப்படுகின்றன. ஏனைய போடிங்ஹவுஸ் அறைகளில் வாழ்பவர்களின் எண்ணிக்கை யைவிட இவ் போடிங்ஹவுஸ் அறைகளில் வாழ்பவர்களின் எண்ணிக்கை குறைவானதாகும். ஒவ்வொரு அறையும் மலசல கூடங்களைக் கொண்டுள்ளது. போடிங்ஹவுஸ்சைச் சுற்றி மதில கட்டப்பட்டுள்ளது. ஏனைய தனியார் போடிங்ஹவுஸ்களில் மாதமொன்றுக்கு வாடகையாக ரூபா 100 - 125 வரை அறவிடப்பட்ட போதிலும் இங்கு வாடகையாக ரூபா 60 மட்டுமே அறவிடப்படுகிறது. சிறு எண்ணிக்கையிலான இளம் பெண்கள் தங்க அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் போடிங்ஹவுஸ்களைத் தவிர ஏனைய அனைத்து போடிங்ஹவுஸ்களும் சுகவாழ்வுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைக்கூட வழங்கவில்லை. இவ்வாறான அனேக போடிங்ஹவுஸ்களில் எவ்வித ஒழுங்கோ கட்டுப்பாடோ கிடையாது. அடிப்படைச் சுகாதார விதிகள்கூட இங்கு கடைப்பிடிக்கப் படுவதில்லை. அறைகள் அழுக்கடைந்தும் கழுவாப்படாத ஊத்தைத்துணிகள் அங்கும் இங்கும் வீசப்பட்டுக் காணப்படும். சமயலறையும் மலசலகூடமும் பக்கம் பக்கமாகவும், குடிதண்ணீர் பெறுகின்ற கிணறும் மலசலகூடமும் மிகவும் நெருக்கமாகவும் அமைந்திருப்பதை மீண்டும் மீண்டும் காணக்கூடியதாக உள்ளது. சமயலறையில் இருந்து வரும் அழுக்கு நீர்ப்பரப்பு நிலச் சாக்கடையில் தேங்கிநின்று அப்பகுதி முழுவதும் முடை நாற்றம் வீசுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கும் காரணமாக இருக்கிறது.

ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்தின் வாழ்வு சுகாதார நிலைமைகள் தொழிலாளர்களின் உடல்நலப் பிரச்சனைகளுக்கு காரணமாக அமைகின்றன என ஏற்கனவே எடுத்துக் காட்டப்பட்டது. தொழிலாளர்கள் தமது உணவுகளை ஒரு நாளைக்கு ஒரு தடவையே தயாரிப்பதும், எவ்வித குளிரூட்டிப் பாதுகாப்பும் இன்றி அதே உணவை மூன்று வேளைகளும் உண்ணுவதாகவும் கூறப்பட்டது. வைத்தியர் கருத்துப்படி, அவ்வாறான பழக்கங்கள் (அவசியத்தின அடிப்படையில் வளர்ந்தவை) வயிற்றுக் கோளாறுகளையும் குடல் வியாதிகளையும ஏற்படுத்துகின்றன. வினியோகஸ்தர்களிடம் இருந்து (சமைக்கப்பட்ட) உணவுகளை வாங்கும் கட்டயாயமும் இவர்களுக்கு ஏற்படுகிறது. இவ்வாறான உணவுகளின் சுகாதார தரமானது மிகவும் கேள்விக்குறியானது. மலசலகூட வசதிகள் போடிங்ஹவுஸ்களின் பிரச்சனைகளில ஒன்றாகும். மலசலகூடங்களின் சுத்தம் மிகவும் கீழ்மட்டத்திலேயே உள்ளதோடு ஒரு போடிங்ஹவுஸில் உள்ளவர்களில் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது எவ்விதத்திலும போதுமானவை அல்ல.



படிப்பகம்

பல வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமைகளின் படி ஒரு மலசலகூடம் 10 க்கும அதிகமானோரால் பாவிக்கப்படுவது 55 மாகும். 18 மான மலசலகூடம் 7 - 8 போராலும், 25 மான மலசலகூடங்கள் மட்டுமே 7க்கும் குறைவான எண்ணிக்கையினரால பாவிக்கப்படுகிறது. அனேகமான பெண் தொழிலாளர்கள் வேலைக்குப் புறப்படுவதற்காக ஒரே நேரத்தில் மலசலகூடத்தை பாவிக்க நேரிடுவது பிரச்சனையை இன்னும் சிக்கலாக்குகிறது. ஆனுல் இந்நிலைமை மேலும் மோசமடைவதைத் தவிர்க்க முன்னேற்றம் காணப்படவில்லை.

வயல்களைச் சார்ந்துள்ள தாழ்ந்த பிரதேசங்களில் அமைந்துள்ள போடிங்ஹவுஸ்களின் நிலைமை மிகவும் பாரதூரமானவை. விடுதிக்கான தேவை, வழங்கலைவிட அதிகமாக இருப்பதால விடுதிகளில் திருத்தங்கள் செய்வதற்குக் கூட விடுதி உரிமையாளர் நாட்டம் காண்பிப்பதில்லை.

எந்த ஒரு போடிங்ஹவுஸ்களிலும் ( தனியார் வீடுகளில் அக்குடும்பத்தாருடன் வசதிகளில் பங்கு கொள்கின்ற ஒரு சில தொழிலாளர்களைத் தவிர ) உட்கார்ந்து ஆறுதலாக இருப்பதற்கு, தமக்குள் கதைத்துப்பேச, பத்திரிகை வாசிக்க தமது குடும்மப அங்கத்தவர்கள உட்பட ஒரு விருந்தினர்களை கவனிப்பதற்குக் கூட விசேடமான இடம் எதுவும் கிடையாது. இந் நிலைமையானது அவர்களுக்கேயான தனிப்பட்ட சமூக நல்லொழுக்கத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடியதும் விரும்பத்தகாததுமான சில பழக்கமுறைகளை வளர்த்துள்ளது. மனித ஒழுக்க முறையின் ஒரு அங்கமான தனித்துவம், பிரத்தியேகம் ஆகிய உணர்வுகளை இவ இளம் பெண்கள் இழந்துவிட்டதாகவும் தெரிகிறது. பல நீண்ட காலமாக அவர்கள் ஒழுகி வந்த சமுதாயம் சார்ந்த உள்ளார்ந்த தடை உணர்வும், மரபுசார் அமைதியும் இழக்கப்பட்டு எவ்வித கூச்சமும் இன்றி ஒவ்வொருவருக்குகும் முன்னுல் உடைகளைக் களைவதாகவும மாற்றி உடுப்பதாகவும் அறிய முடிகிறது. அத்தோடு போடிங்ஹவுஸில் உள்ளவர்கள் தமது "காதலர்களை" மகிழ்விக்குகும் ஒழுக்க சீர்கேட்டை சகிக்க முடியாமல் ஏனையோர் போடிங்ஹவுஸில் இருந்து அவ்வேளைகளில் வெளியேறுகின்றனர், சில சந்தர்ப்பங்களில் அவ போடிங்ஹவுஸில் இருந்து முற்றுகவே வெளியேறுகின்றனர்.

போடிங்ஹவுஸ் எஜமானர்களோ இவ்வாறன ஒழுக்க முறை குறித்து சிறிதளவே கரிசனை கொள்கின்றனர். ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்ப காலகட்டத்தில விடுதி எஜமானர்கள் சமூகரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சில பழக்கவழக்கங்களை செயற்படுத்தக் கூடிய அடிப்படை ஒழுங்கு விதிமுறைகளை ஏற்படுத்தினர். எவ்வாறுயினும் அடிப்படை வசதிகள் கூட அற்ற விடுதிகளில் அவ்வாறன விதிமுறைகளையும் ஒழுக்க நெறிகளையும் செயல்படுத்துதல் சாத்தியமான ஒன்றல்ல. இன்றைய இவை பகிரங்க இடங்களை விட எவ்வித்திலும் சிறந்தவை அல்ல ஒருவருக்கு தான் விரும்பியவாறு உட்புகுந்து வெளியேறமுடியும். போடிங்ஹவுஸில் வசிக்கும் ஒரு பெண்ணின் "காதலனுக" இருப்பது இளம் பெண்கள் வசிக்கும் விடுதிக்கு பகலிலோ, இரவிலோ தான்விரும்பிய நேரம உட்செல்வதற்கான உரிமைச் சான்றிதழ் ஆகும். போடிங்ஹவுஸ் உரிமையாளர்களின் கருத்துப்படி நிலைமைகள் படிப்படியாக சீரழிவதற்கு இன்னுமொரு காரணம் உண்டு.. பலம் பொருந்திய வெளியாரின் தலையீடானது விடுதி உரிமையாளர்கள் ஏதோ ஒரு வகையிலான ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் போடிங்ஹவுஸ்களில் நடைமுறைப்படுத்த எடுக்கும ஒவ்வொரு முயற்சியையும் பயனற்றதாக்கி விடுகிறது. அவ்வாறன விடுதி உரிமையாளர்கள், அங்கு வசிக்கும் இளம் பெண்களின் காதலர்களாக தம்மை பாவனை செய்யும் குண்டர்களால தாக்கப்பட்டு அல்லது எச்சரிக்கப்பட்டுள்ளனர். ஆயுதப்படையைச் சார்ந்தோர் இப்பகுதிகளில நடமாடுவது இந்நிலையை மேலும் மோசமாக்கி உள்ளது.

www.padippakam.com

கொண்டாட்ட நாட்களிலும், வார இறுதியிலும் – விசேடமாக வார இறுதியில் "இசைமாலை" ஒழுங்கு செய்யப்பட்டிருந்தால், ஆயுதப்படையைச் சார்ந்தோர் சிவில் உடைகளில் பெண்விடுதிகளைச் சுற்றித் திரிவர் என அறியமுடிகிறது. ஆயுதப்படையைச் சார்ந்தோரின் பல்வேறு பிரிவுகளுக்கு இடையில் இடையிடையே மோதல்கள் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. இவை அனைத்தும் தமது போடிங்ஹவுஸ்களில் வாழும் பெண்கள் குறித்து விரோதமான பார்வையையே விடுதி எஜமானர்களிடம் வளர்க்கிறது. தமது மாதாந்த வாடகையை வசூலிப்பதைத் தவிர தமது போடிங்ஹவுஸில் வசிப்போர் குறித்து விடுதி எஜமானர்கள் கவனம் செலுத்துவது மிகவும் அரிதேயாகும்.

தமது தொழிலை முடித்துக்கொண்டு வந்த பின்னர் ஆறுதலாக உட்காரவோ, ஓய்வு எடுக்கவோ ஒரு இடம் இல்லாததால் அனேக இளம் பெண்கள் எவ்வித இலக்கும் இன்றிச் சுற்றித்திரியும் பழக்கத்தை வளர்த்துள்ளனர். அவ்வாறான பழக்கம் ஒன்று ஏற்பட்ட பின்னர் அதனைக் கைவிட்டு மிகவும் கட்டுப்பாடானதும் ஒழுக்கமானதுமான வாழ்க்கைக்குச் செல்வது கடின மானதே.

தமது விடுதியில் உள்ளோர் தொடர்பாக விடுதி எஜமானர்கள் கொண்டுள்ள எதிர்மறையான பார்வையானது விடுதியிலும் அதற்கு வெளியிலும் தமது மனப்போக்கிற்கு ஏற்றவாறு நடந்துகொள்ளக்கூடிய சுதந்திரத்தை இவ்விளம் பெண்களுக்கு வழங்கியுள்ளது. சில விடுதிகளில் அவ்வாறு பழகுவதற்கான சுதந்திரத்தை அனுபவிக்கும்போது ஏற்கனவே ஒரு ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவிய விடுதிகளில் கூட அதனைத் தொடர்ந்தும் நிலைநாட்டுவது இயலாத காரியமாகும். ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்தில் வேலை செய்யும் விடுதியில் உள்ள முழுச் சன சமூகமும் ஒரு சுதந்திர சமுதாயமாக – தமது பெற்றோர்களிடம் இருந்து தூரத்தில் வசிக்கும் திருமணமாகாததும் 18 – 30 வயதிற்குகுட்பட்ட இளம் பெண்களைக் கொண்ட பூரண சமுதாயமாக மாறுவதே இதன் ஒட்டுமொத்த விளைவாகும். இவ்விளம் பெண்கள் வளர்க்கப்பட்ட கலாச்சாரப் பின்னணியின் கீழ் இந் நிலைமையானது எண்ணிறைந்த சமூகப் பிரச்சனைகளை தோற்றுவிப்பது தவிர்க்க முடியாததாகும்.

வளவுக்குள் விடுதி உரிமையாளர் வசிக்காத விடுதிகளின் நிலைமை இன்னும் கேவலமானது. அயலவர் கருத்துப்படி அவ்வாறான விடுதிகள் விலைமகளிர் மனையை விட எவ்வித்திலும் சிறந்தவை அல்ல.

தொழிற்சாலைகளால் நடாத்தப்படும் சில விடுதிகள், அவற்றுக்கு கொடுக்கப்பட்ட வசதிகள் ஏனையவற்றை விட நன்றாகவும், வாடகை குறைவாகவும் இருந்தும் அவற்றின் கொள திறனுக்கும் குறைவாகச் செயற்படுவதை அவதானிக்கும் போது ஒரு வேளை ஆச்சரியமாக இருக்கலாம். ஒருவகையான ஒழுங்கும் ஒழுக்கமும் இவ்விடுதிகளில் கடைப்பிடிக்கப்பட்டன என்பது முதலாவதும் முக்கியமானதும் ஆகும். ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்தின் தொழிலாளர்கள் கடந்த சில வருடங்களாக ஒழுங்கும் ஒழுக்கமும் அற்ற விடுதிகளில வாழ்ந்து பழக்கப்பட்டதால் அவர்களை அதற்குப் பழக்குவிப்பது மிகவும் சாத்தியமற்றதாகும். வளவுக்குள் "காதலர்களை" மகிழ்விக்கும் முறை தொடர்பாக கண்டிப்புகளை ஏற்படுத்தக்கூடிய வழிமுறைகளைக் கண்டு சீற்றம் கொள்கின்றனர். "எனது தொழிற்சாலையின் விடுதிகள் விலைமகளிர் மனையாக மாறுவதை என்னால் அனுமதிக்க முடியாது" என ஒரு தொழிற்சாலை முகாமையாளர் கூறினார். இரண்டாவது, தொழிலாளர்களால் தொழிற்சாலையில வெறுக்கப்படுகின்ற மேற்பார்வையாளர்களே தொழிற்சாலையில் பராமரிக்கப்படும் விடுதிக்கும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். தம்மால் வெறுக்கப்படுகின்ற பெண்களே வேலை



படிப்பகம்

www.padippakam.com

முடிந்து வீட்டுக்கு வந்தபின்னரும் தம்மைக் கட்டுப்படுத்துவதைக் காணும்போது தொழிலாளர்கள் சீற்றம் கொள்கின்றனர். மூன்றுவது, அவசர வேலைகளுக்காக உதவி தேவைப்படும் எல்லா வேளைகளிலும் தொழிற்சாலை நிர்வாகம் தொழிற்சாலை விடுதிகளில தங்கியுள்ள தொழிலாளர்களையே, இரவு நேரங்களில் கூட வேலை செய்யுமாறு வலியுறுத்துவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. விடுதியில் வசிப்பவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் செய்தே தீரவேண்டியுள்ளதால் உடன்படுகின்றனர்.

விடுதி தொடர்பான பிரச்சனைகளுக்கு வேறு பக்கத் தோற்றங்களும் உண்டு. விடுதி எஜமானர்களும் பொதுமக்களில் அனேகரும் இவ்வுழைப்புப் படையை வருமானத்தைத தேடித்தருகின்ற ஒரு மூலமாய் கருதுகின்றனர். வருமானத்துக்கான இம்மூலத்தை தனது உபாயங்களைக் கொண்டு பயன்படுத்துவது ஒருவருடைய சூழ்ச்சித் திறனைப் பொறுத்ததாகும விடுதி எஜமானர் இந்நிலையை தமது ஆதாயத்துக்காக பயன்படுத்துகின்றனர். விடுதி எஜமானர்களாக இருப்பதுடன் விடுதியில் தங்கியிருப்பவர்களுக்கு பலசரக்கு விநியோகிப்பவர்களாகவும் மாறியுள்ளனர். கட்டுநாயக்கா ஏற்றுமதி பதனீட்டு வலயத்திலிருந்து 1 2 - 2 கி.மீ அரைவிட்டதிற்குள் 600 க்கும் மேற்பட்ட மளிகைக் கடைகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை விடுதி எஜமானர்களுக்குச் சொந்தமானதாகும். இவ்விடத்தில வலியுறுத்தப்பட வேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில் ஒரு குறிப்பிட்ட விடுதியில் வசிப்பவர்கள் அவ்விடுதி எஜமானருக்குச் சொந்தமான மளிகைக் கடையிலேயே தமக்குத் தேவையான பலசரக்குச் சாமான்களை வாங்குவதற்கு கூடிய, குறைந்த பட்ச நிர்ப்பந்தக்களுக்கு உள்ளாகின்றனர். இக்கடைகளின் விலை மட்டமானது வெளிக்கடைகளின் விலையைவிட 20 - 25 அதிகமானதாகும்.

கிராமப் புறங்களில் பிரபல்யமாகவுள்ள கூட்டாகப் பணம் சேமிக்கும் சீட்டு விடுதி எஜமானர்களால் தமது நலன்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு சீட்டு சரியான முறையில் செயல்படுவதாயின் ஆகக்குறைந்தது 12 பேர்களைக் கொண்டதும் தவறுமல் மாதமொரு தடவை ஒரு வருடகாலத்திற்கு செலுத்துவதுமாக அமையும். விடுதியில இருப்பவர்கள் பொதுவாக ரூபா 500ஐ மாதமொன்றிற்குரிய பங்குப்பணமாகச் செலுத்தும் சீட்டில் அங்கம் வகிக்கின்றனர். வலயத்தில் வேலை செய்யும் இவ்விளம் பெண்கள் தமது நிலையான செலவினங்கள் கழிந்ததன் பின்னர் ரூபா 500ஐச் சேமிப்பது இரண்டு மூன்று பேர் பங்காக ஒரு சீட்டில் சேருகின்றனர்.

லொத்தர் சீட்டு விழுந்து அதற்குரியவரிடம் சேரும் பணத்தை வழங்குவதே கிராமப் புறங்களில் வழக்கம். போடிங்ஹவுஸ்களில் எஜமானரே சீட்டுப் பிடிப்பவராகவும் அவரே முதலாவது சீட்டைப் பெற்றுக் கொள்கிருர். இத்தகைய சீட்டுகள் இடையில் தோல்வியில் முறிவதாகவும் அவ்வாருன தோல்விகளுக்கு விடுதி எஜமானர்களின் பங்கு பற்றியும் அடுத்தடுத்துக் கூறப்பட்டது. எவ்வாருயினும் முதலாவது சீட்டுப் பணத்தை அவரே சேகரித்துக் கொள்வதால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவருக்கு நட்டம் ஏற்படுவதில்லை. தோல்வியில் முறியும் சீட்டுப் பணம் ஒரு காலமும் திரும்பி வழங்கப்படுவதில்லை. சீட்டு தானுகவே முறிவடைவது தான் வழக்கமாகும்.

விடுதியில் வசிப்பவர்களிடம் இருக்கும் இறுதிப் பணத்தையும் உறிஞ்சிக் கொள்வதற்காக விடுதி எஜமானர்கள் "நல்லிரக்கம்" கொண்ட நடுவர்கள் என்னும் பாத்திரத்தை வகித்து சில நகைகளைச் செய்வதற்காக இவ்விளம் பெண்களுக்கு அறிமுகம் செய்கின்றனர். நிச்சயமாக விடுதி எஜமான் / எஜமானி நகைக் கடைக்காரர்களிடமிருந்து கமிஷன் பெறுகிறார். ஆனால் அக்கமிஷன் இறுதியில்



படிப்பகம்

www.padippakam.com
நகையின் விலையுடனேயே சேர்த்துக் கொள்ளப்படுகிறது. வேறு சிலர் இவ்விளம் பெண்களை மானக்கேடுகளுக்கான வீடுகளுக்கும் அறிமுகம் செய்கின்றனர்.

குறைந்த சம்பளமும் எவ்விதத்திலும் நம்பமுடியாத பொதுப் போக்குவரத்துமே ஏற்றுமதி பதனீட்டு வலய உழைப்புப் படையினர் நெருக்கமாக இருப்பதற்கு காரணமாகும். விடுதியில் தங்கியிருப்போர் சிறு எண்ணிக்கையினராகவும், கட்டுநாயக்க ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்திலிருந்து சுமார் 3 / 4 கிலோமீற்றர் தூரத்திலும் இருப்பார்களாயின் அவர்களுடைய வாழ்வும் வாழ்க்கைத் தரமும் வெகுவாக முன்னேற்றம் அடைய உண்டு. விடுதி எஜமானர்களும் அவர்களை மானிடப் பிறவியாக கணிப்பதோடு நல்ல பாதுகாப்பும் கிடைக்கும். அவ்வாறு விடுதியில் இருப்பவர்கள் பரந்துபட்ட சமுதாயத்தின் ஒழுக்க நெறிகளுக்கு அமைவாக நடப்பர் எனவும் விடுதி எஜமானர் கருத்துத் தெரிவித்தனர்.

தொழில் செய்யும் இவ்விளம் பெண்கள் வேலையிலிருந்து இரவு நேரங்களில் வீடு திரும்பும் போது பாதுகாப்பு தொடர்பான அபாயத்திற்கும் முகம் கொடுக்கின்றனர். பிரதான வீதிகளைத் தவிர அநேகமான தெருக்களில் வெளிச்சம் இல்லை. சில சமயங்களில் மட்டுமே விடுதிப் பராமரிப்பாளர்கள் இவ்விடயம் தொடர்பாக தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்துகின்றனர். தெருவில் வெளிச்சம் இல்லாமலிருப்பதையே விரும்பும் பலருக்காக பொறுப்பு வாய்ந்த நபர்களும் தெருவிளக்குகளைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பிலிருந்தும் மழுப்பித் தப்பித்துக் கொள்கின்றனர். இதன் விளைவாக இரவு நேரங்களில் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பும் இப்பெண் தொழிலாளர்கள் திருடர்களால், காடையர்களால், மனநோயாளிகளால், கொள்ளையடிக்கப்படுதலும், தொந்தரவுகளுக்கும் சில சந்தர்ப்பங்களில் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படுவதற்கும் ஆளாகின்றனர். ஏற்றுமதி பதனீட்டு வலயம் ஸ்தாபிக்கப்பட்ட காலகட்டத்தில் இருள் சூழ்ந்திருந்த சமயம் இளம் பெண் உதவி கேட்டுக் குரல் எழுப்பிய பொழுது சில குடியிருப்பாளர்கள் உதவி செய்ய முன்வந்தனர். ஆனால் அயல்வாசிகளின் இப்பழக்கமானது சில வருட காலத்துக்குள் அழிந்துவிட்டது. ஆயுதப் படையைச் சார்ந்த நபர்கள் இளம் பெண்களின் "காதலர்களாக" பெருமளவில் நடமாடுவதே அயல்வாசிகள் ஒதுங்கி வாழ்வதற்கான காரணமாகக் காட்டப்படுகிறது. உதவியளிக்கக் கூடிய அயலவர்கள் அச்சுறுத்தப்பட்டும் சில சந்தர்ப்பங்களில் பழிவாங்கப்பட்டும் இளம் பெண்கள் உதவி கேட்டுத் துணிந்த போது திருப்பித் தாக்கப்பட்டும் உள்ளனர். இந்நிலைமைகளின் பெறுபேறாக மாலை முறை மாற்று வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் போதான பாதுகாப்புப் பிரச்சினையை தமது சொந்த உபாயங்கள் மூலமாக தீர்த்துக் கொள்கின்றனர். உதாரணமாக ஒரு 'காதலனை' வைத்திருப்பது.

## பரந்த சமூகப் பிரச்சினை

ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் தோற்றத்துடன் கூடவே உருவாகிய ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் உழைப்புப் படை குவிக்கப்பட்ட காட்சிக்குள் "காதலர்கள்" அறிமுகப்படுத்தப்படுவதுடன் நாம் பரந்த உருவளவைக் கொண்ட சமூகப் பிரச்சினைக்குள் நுழைகிறோம். ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தைச் சூழவுள்ள பிரதேசத்தில் சேர்க்கையாக ஏற்படுத்தப்பட்ட பால் விகிதாசாரத்தின் சமமற்ற தன்மை மிகத் தெளிவாகத் தெரியும் வேறுபாடுகளில் ஒன்றாகும்.



படிப்பகம்

அப்பிரதேசத்தில் ஒரு ஆணுக்கு ஒன்பது பெண் என்னும் பால் விகிதாசாரமானது இச்சமமற்ற தன்மை எவ்வளவு அதிகமானது என்பதைக் காட்டுகிறது. இவ்வாறான மாற்றத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆண் பெண் பாலர்களுக்கிடையேயான உறவு கூட மட்டுமீறியே போகக்கூடியதாயிற்று. உழைக்கும இளம் பெண்கள் முதல் தடவையாக வலயத்துள் பிரவேசிக்கும் போது நாணமும் அமைதியும கொண்ட பெண்களாக இருந்தார்கள். ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்திற்கு வேலைக்காக அவர்கள பிரவேசிக்கின்ற காலம் வரையும் இலங்கையின் கிராமிய விவசாய சமூகத்தவர்களால் ஏற்றுக கொள்ளப்பட்ட கலாச்சார விழுமியங்களுக்கு அமைய தத்தமது பெற்றோரால் இவர்கள பாதுகாக்கபட்டார்கள். ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் தொழில் செய்யும் வயதைச் சார்ந்த இளம் பெண்கள், இலங்கைச் சமுதாயத்தின் கலாச்சாரப் படிவங்களின்படி திருமணம் செய்யும் வயதுடையோர் ஆவர். அத்துடன் எவ்வளவு விரைவாக திருமணம் செய்கிறார்களோ அவ்வளவுக்கு நல்லதாகும். தமது பெற்றோரால் தமது எதிர்பார்ப்பிற்கு ஏற்ற கணவனை, அதுவும் குறிப்பாக தாம் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்திற்கு வேலைக்கு வந்த பின்னர், ஏற்பாடு செய்ய முடியாது என்பதையும் இப்பெண் உழைப்புப் படை நன்கு அறியும். அவர்களுடைய பருவ வயதில் பெரும்பாலும் அவர்களைப் பற்றி சிருஷ்டிக்கப்படுகின்ற அபிப்பிராயத்தைப் பொறுத்தே அவர்களது திருமணத்தையும் பற்றிய எதிர்பார்ப்புகள் அமையும். அவ்வாறு சிருஷ்டிக்கப்படுகின்ற அபிப்பிராயங்கள் தம்மைப் பற்றிய பார்வையை வளர்ப்பதில் நிலையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பருவ வயதிற்குரியவர்கள் என்னும் ரீதியில் கதாநாயகனையும் கதாநாயகியையும் கொண்ட காதல் கதைகளை வெளியிடும் படத்துடன் கூடிய வராந்த சஞ்சிகைகளையே வாசிக்கின்றனர். இக்கதைகள் வழக்கம் போல் சகல விதமான கஷ்டங்களையும், தடைகளையும் தாண்டி இறுதியில் சோடிகள் ஒன்று சேர்வதிலேயே முடிவுறுகின்றன. பேட்டி கண்ட அநேக உழைக்கும் பெண்கள் இவ்வாறான கதைகள யதார்த்தமற்றவை என்பதை அங்கீகரிக்கின்றனர். எவ்வாறாயினும் தமது நாளாந்தக் கஷ்டங்களை தற்காலிகமாகவாவது மறந்திருப்பதற்கு இவை உதவி செய்கின்றன என கூறினர்.

இவ்விளம் பெண்கள் வலயத்துக்குள் வந்து 3 — 6 மாத காலத்தின் பின்னர் அவர்களது பழக்க வழக்கங்களில் மாற்றம் ஏற்படுகின்றது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயான பிணைப்பு படிப்படியாக அற்றுப் போவதே இம்மாற்றத்திற்கான காரணமாகத் தெரிகிறது. பயிலுநிலைக காலத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு தமது பெற்றோரைக் காணச் செல்லும் சந்தர்ப்பம் மிகவும அபூர்வமாகும். பெற்றோருக்கும், குறிப்பாக காலி, மாத்தறை, பதுளை, அநுராதபுரம் போன்ற தூர இடங்களைச் சார்ந்தோருக்கு பெற்றோர் பிள்ளைகளுக்காக பிணைப்பைப் பேணக் கூடிய அளவில் தமது பிள்ளைகளைப் பார்க்கச் செல்வதும் தாங்கிக் கொள்ள முடியாத செலவாகும். புதிதாக வேலைக்கு வருபவர்கள் தமது சக தொழிலாளர்களின் கவனிப்பாரற்ற பழக்க வழக்கங்களை படிப்படியாகப் பற்றிக் கொள்ளுகிறார்கள். தொழிற்தேவையும், நலனிற்கு ஒவ்வாத நிலைமைகளும், புதிய வாழ்க்கைமுறைக்கு வெளித்தள்ளப்படுதலும், குறிப்பாக ஏற்றுமதி பதனீட்டு வலயத்துள சிறிதளவு கூடியளவு அனுபவம் பெற்ற சில உழைக்கும் இளம் பெண்களும் மற்றும் ஒவ்வொரு இளம் பெண்ணும் முகம் கொடுக்க நேர்ந்துள்ள பாதுகாப்புப் பிரச்சினையும் எல்லாமொன்றாகச் சேர்ந்து புதிய கலாச்சாரமொன்றை இப்பெண் தொழிலார்களின் சமுதாயம் சார்ந்ததாகதாக்கியுள்ளது.

ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தை சூழவுள்ள பிரதேசத்தில் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட பால்விகிதாசாரத்தின் வழக்கத்திற்கு மாறான நிலைமையும் மேலே விபரிக்கப்பட்ட ஏனைய பல காரணிகளும் இணைந்து "காதலன்" ஒருவனைச் சேர்த்து தேடிக் கொள்வதற்கான பெரும் போட்டியை இவ்விளம் பெண்கள் மத்தியிலே ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. மக்களது பொதுவான பார்வையும் இவ்வாறான நிலை தோன்றுவதற்கு பங்களிப்புச் செய்துள்ளது. இப்பெண்களதும், இவர்களால் கிடைக்கும் பணமும் இவ் முழுப் பிரதேசமும் பொருளாதாரரீதியாக மிகப் பெருமளவில முன்னேற்றம் அடைய பிரதான காரணங்களாக அமைந்த போதிலும் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தைச் சார்ந்த எவரும் இவ்வுழைக்கும் இளம் பெண்களுக்கு எவ்வித மதிப்பையும் மரியாதையும காண்பிப்பதில்லை. பஸ் வண்டிகளிலும் பொது இடங்களிலும் இவ்விளம் பெண்கள் ஜீக்கி கேலி என அடிக்கடி ஏளனம் செய்யப்படுகிறார்கள். பரந்துபட்ட சமுதாயத்தில் தமக்குத் தாழ்ந்த நிலையே கிடைத்துள்ளதென இவ்விளம் பெண்கள் உணர்கிறார்கள். இவ்வாறான நிலைமைகளின் கீழ் பண்பான வாழ்க்கைத் துணைவனை தேடிக் கொள்வது நடைபெறமுடியாத காரியம் என்பதையும் இவர்கள் விளங்கியுள்ளார்கள். ஆதலால் ஏதோ ஒரு வகையில் கருணை அல்லது இளக்காரம் காட்டக்கூடிய ஆராவது ஒருவர் மீது விழுகிறார்கள்.

இந்த நிலைமைகளின் கீழ், இவ்விளம் பெண்களை காதலிப்பதன் மூலம் தமது வாழ்வை நகர்த்தும் ஒரு இளம் தட்டினர் (அவ்வளவு இளமை இல்லாதவர்களும்) தோன்றியுள்ளனர். இவர்கள் வாழ்வின் சகல பக்கங்களையும் சார்ந்தவர்களாவர். சிலர் அப்பிரதேசத்தைச சேர்ந்தோர் சிலர் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் சிலர் வலயத்துள்ளும் வேறுசிலர் வெளியிலும் வேலை செய்கின்றனர்,வேலை அற்றவர்களும் கூட. சிலர் திருமணம ஆகாதவர்கள், சிலர் திருமணம் செய்தவர்கள், சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் உள்ளோர். இவ்வாறு வாழ்வின் சகல தராதரங்களையும் சார்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் ஒரே விதமான உறுதிமொழியை இவ்விளம் பெண்களுக்கு அளிக்கின்றனர். அதாவது இறுதியாக திருமணம் செய்வோம் என்பதாகும். இவ்விளம் பெண்களில் பெரும்பான்மையானோர் இவ்வலைக்குள் வீழ்கின்றனர். இவ்விளம் பெண்களைப் பொறுத்தவரையில் " எங்கள் அனைவருக்கும் காதலர்கள் உண்டு, நாங்கள் வேறு எதைத்தான் செய்வது? செய்வதற்கு வேறு எதுவும் இல்லை, போவதற்கு வேறு இடமும் கிடையாது, எங்களை யாரும் கவனிப்பது இல்லை" என்பதேயாகும். யாராவது ஒரு இளம் பெண்ணின் நகைகளை "காதலனை"ப் பற்றி விடுதி உரிமையாளருக்கும் பொலிசாருக்கும் அடிக்கடி முறைப்பாடுகள் கிடைக்கின்றன. பொலிசாரின் தகவல்களின்படி அனேக சந்தர்ப்பங்களில் இக்காதலர்கள் வெவ்வேறு பெண்களுடன் வெவ்வேறு இடங்களில் சுகத்தை அனுபவிப்பதாகவும், இப்பெண்களிடம் இருந்து பொருளாதார ரீதியாக நன்மையைப் பெறுவதாகவும் அறிய முடிகிறது.

விடுதி உரிமையாளர்கள், விடுதி உரிமையாளர்களின் புத்திரர்கள், ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் ஆண் தொழிலாளர்கள், அப்பிரதேசத்தைச் சேர்ந்த கடைக்காரர்கள், ஆயுதப்படையைச் சார்ந்தோர், காதலன் என்னும் பாத்திரத்தை வகிப்பதன் மூலம் மகிழ்ச்சியடைய விரும்பும் யாராவது இனம் தெரியாத பேர்வழி ஆகியோரே இப்போலிக்காதலர்கள். ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் பல வருடங்களாக வேலை செய்வதன் மூலம் கூடிய அனுபவம் பெற்றுள்ள சில இளம் பெண் தொழிலாளர்கள் இவ்வாறன "காதலர்கள்" தங்களைத் திருமணம் செய்வதற்கான சந்தர்ப்பம் மிக அரிதே என உணர்ந்துள்ளார்கள். தமக்கே தெரியாத ஒரு எதிர் காலத்தில் இவர்களைத் திருமணம் செய்து

www.padippakam.com

கொள்ளலாம் என்ற நம்பிக்கை இல்லாத போதும் சமூக அமைப்பில் இருந்து கிடைக்காத "பாதுகாப்புக் காரணங்களுக்காகவும்" ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காகவும் இப் போலிக காதலர்களுடன் இவ்விளம் பெண்கள் ஒரே சுபாவத்துடனேயே பழகுகின்றனர். திருமணம என்பது தமது வாழ்க்கையில் இன்னும் ஒரு கனவு என்பதை உளப்பூர்வமாக ஆழமாக விளங்கிக் கொண்ட போதிலும் காதலன் என்பதன் அர்த்தம் எதுவாக இருப்பினும், சுதந்திர வர்த்தக வலயப் பிரதேசத்தில் பால் விகிதாசாரத்தில் பாரிய சமமற்ற காரணத்தால்

"இசை மாலை"களின் தோற்றமே மிக அண்மையில் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட சமூக இயல்புக் காட்சியாகும். ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயச் சுற்றுடலில் மிகச் செறிவான குடியிருப்பு பிர தேசங்களில் பிரபல்யமான இசைக்குழுக்களே மாதத்திற்குப் பலதடவைகள் வரவரழைத்து இசை மாலைகள் நடாத்தப்படுகின்றன. அவ்வாறன இசை மாலைகளுக்கு அவசிய செலவுகளான மேடை அமைத்தல் ஒளி, உபகரணச் செலவு, இசைக்குழுவுக்கு வழங்கப்படும முற்பணம் ஆகியவற்றிற்கு பிரதேசத்து நகைக்கடைக்காரர்கள் ஆதரவு வழ}குகின்றனர். இவர்களால் வழங்கப்படும் ஆதரவுக்கு பிரதியுபகாரமாக வர்த்தக நிலையங்களுக்கு விளம்பரம கிடைக்கின்றது.

இவ் இசை மாலைகள் இரவு பூராவும் தோடர்ந்து நடைபெறும் விளையாட்டு மைதானங்கள போன்ற பரந்த, திறந்த வெளிகள் வேலியடைக்கப்பட்டு இசை மாலைகள் நடாத்தப்படும். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ரூபா 15 - 25 வரை பிரவேசக்கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. சங்கீத மாலைகளுக்கு பொதுவாக 5000 பேர்வரை கூடுவர். இவர்களில் பெரும்பாலானவர்கள ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் பெண் தொழிலாளர்களும் அவர்களின் காதலர்களுமே.

இளம் சோடிகள் எவ்வித தடுத்து நிறுத்தலும் அற்ற மகிழ்வைப் பெறுவதற்கான சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்துவர். இசைமாலைகளின் போது போதிய அளவு மது சட்டவிரோதமாகப் பெறமுடிவதோடு இளம் பெண் தொழிலாளர்கள், அவர்களது காதலர்களே வெறியூட்டும் பொருட்களை வழங்குவதையும் காணமுடியும். அனேக இளம் பெண்கள் வேலியடைக்கப்பட்ட மைதானங்களில் மட்டுமன்றி ஒழுங்கைகளிலும் நடைபாதைகளிலும தமது பாலியல் அவாக்களை பூர்த்தி செய்வர். இச் செயல்களுக்கு உடன்படாத ஆனுல் வெறும கேளிக்கைக்காக மட்டும் இசைமாலைகளுக்கு செல்கின்ற தொழிலாளப் பெண்கள் காடையர்களாலும் சில சந்தர்ப்பங்களில் ஆயுதப்படையைச் சார்ந்தோராலும் பலவந்தமாகக கற்பழிக்கப்படுகின்றனர். இசைமாலை நிகழ்ச்சிகளின் போது ஆயுதப் படையினரின் பல்வேறு பிரிவினருக்கிடையே வன்முறை மோதல்களும் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு இசைமாலையின் பின்னரும் நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தைச் சூழ பெண்களின் உள்ளங்கிகள் சிதறுண்டு கிடப்பதைக் காணமுடியும் எனப் பிரதேச வாசிகள் கூறுகின்றனர். பொலிசாரின தகவல்களின்படி இவ்வாறன இசைமாலைகள் உழைக்கும் இளம் பெண்களதும அப்பிரதேசத்துப் பொதுமக்களதும் ஒழுக்கத்திற்கு பெரும் அச்சுறுத்தல் எனவும், அவ்வாறன நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்க தயக்கம் காட்டுவதாகவும் அறிய முடிகிறது. பொலிசா ரின் வார்த்தைகளையே மேற்கொள் காட்டுவதாயின்; "மேலிடத்து அழுத்தங்கள்" காரணமாக தமது கடும் தன்மையை தயர்த்தி அனுமதி வழங்குகின்றனர். பொலிசார் தகவல்படி ஒவ்வொரு இசைமாலைக்குப் பின்னரும் கொள்ளையடித்தல், பலவந்தமான கற்பழிப்பு, வன்செயல்கள் பற்றி பொலீஸ் நிலையத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இசை மாலையின் போது இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த பொலிசார் தலையிடுகின்றனர். இசை மாலைகளின் போது இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களில ஆயுதப்படையைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுவது வழக்கமான வடிவமாகியுள்ளது.



படிப்பகம்

இவ்வரைமுறையற்ற நடத்தையானது இவ்விளம் பெண்கள் கருத்தடை செய்வதற்கு அல்லது தாயாவதைத் தடுப்பதற்கான 'ஆலோசனைகள்', 'உதவிகள்' வழங்குவதற்கென பல "மருத்துவ நிலையங்கள்" தோன்றுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இந் நிலையங்களில் பணிபுரியும மருத்துவ ஊழியர்கள் தகைமை பெற்றவர்களா என்பது ஒவ்வொருவரதும் ஊகத்திற்கு உரியதாகும். பாலியல் உறவு காரணமாக ஏற்படும் வியாதிகளுக்கு (STD's) பொறுப்பான கொழும்பில் உள்ள வைத்திய உத்தியோகத்தர் கூற்றின்படி ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்தில பணியாற்றும் பல டசின் இளம் பெண்களுடன் உடலுறவு கொண்ட பின்னர் STD's ஐத தொடர்பு கொண்ட பல நோயாளிகளைச் சந்தித்ததாக அவர் கூறினார்.

ஏற்றுமதி ஊக்குவிப்பு அபிவிருத்தி மூல உபாயம் தொடர்பாக இறுதிக் கருத்தைக கூறுவதாயின், இவ் அபிவிருத்தி மூல உபாயமானது வேலை இல்லாத்திண்டாட்டத்தை எவ்வித்திலும் உருப்படியாகக் குறைக்கவில்லை. இவ் மூல உபாயமானது வேலை தேடிக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்குகும் யுவதிகளுக்கும் சிறிதளவில் பொருத்தமான புதிய வகை உழைப்பொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

அதி செறிவான முறையில் இளம பெண் தொழிலாளர்களை தொழிற்சாலைக் கூலிகளாக வேலைக்கமர்த்துவது இலங்கைச் சமூகத்தில் அண்மையில ஏற்பட்ட விருத்தியாகும். இவ்விடயம் தொடர்பான சில அடிப்படைக கேள்விகள் சமூகவியலாளர்களிடம ஏற்படுகிறது. இலங்கை அரசாங்கத்தால் கடைப் பிடிக்கப்படுகின்ற இப்புதிய அபிவிருத்தி மூல உபாயமானது அபிவிருத்தி பதனீட்டு வலயங்களில் தொழில் புரிகின்ற பெண் தொழிலாளர்களின் சமூக–பொருளாதார நிலமைகளில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது ? இக் கேள்விக்கு பல கோணங்கள் உண்டு. முதலாவதாக இவ் உழைக்கும் பெண்களது பொருளாதார நிலைமைகளில குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டுள்ளதா? இரண்டாவதாக முற்றிலும் எவ்விதத்திலும் பழக்கப்படாத சமூக – வாழ்க்கை சுற்றுச் சார்பு நிலைக்கு நேரடியாக முகங் கொடுப்பது இவ் இளம் பெண்களின் வாழ்க்கையில் எவ்விதமான பாரத்தை சுமத்துகிறது? மூன்றாவதாக இவ இளம் பெண்கள் ஏற்றுமதி ஊக்குவிப்பு உழைப்பில் ஈடுபடுவது இலங்கைச் சமூகத்தில் மரபு ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விழுமியங்களுக்கு எவ்விதமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது? இறுதியாக இவ் இளம பெண்கள் ஆகக் கூடியது 10 – 15 வருடங்களில் சுதந்திர வர்த்தக வலய வேலைகளில் இருந்து விலகியதன் பின்னர், அவர்களுக்கு எவ்வாறான, தொழில், பொருளாதார, சமூக வாய்ப்புகள் உண்டு?